பொங்கும் மங்களம் எங்கும் தங்குக

மதுரை நாயக்க அரசர்கள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
MADRAS

இது

R. S. நாராயணசாமி ஐயர், பி. ஏ., பி. எல்.,

எழுதியது

பிரசுரகர்த்தர் :

வி. சூ. சுவாமிநாதன்

மதுரை : : திருநெல்வேலி

பதிப்புரிமை]

[விலை 0–8–0

Fourth edition—1950–1000 *copies*

V2119S J
N50

LIBRARY
MADRAS
108242

Kabeer Printing Works, Madras—5

INTRODUCTION

I have been asked to write an introduction to Mr. R. S. Narayanaswami Aiyar's : "*Nayak King's of Madura*" and perhaps the best way of discharging that pleasant though difficult function is to prepare the path of the reader to the eventful period when the Nayaks hold sway over Madura. Everyone knows of the great antiquity of the Kingdom of Madura, which at the dawn of South Indian History had already come to be ruled over by the Pandyas. The *Mahavamsa*, the well-known Ceylon Chronicle, states that Vijaya, the first King of Ceylon, who should be assigned a date not far removed from 500 B. C. was the son-in-law of the Pandya King. Megasthenes, the great ambassador at the court of Chandragupta (about 300 B.C.) mentions the Pandya Kingdom. In one of Asoka's inscriptions, the Pandya Kingdom is mentioned as one of the independent states of the South to which he sent missionaries to preach Buddhism. The Hathigumpa inscription of Kharavela (about 100 B. C.) conveys the interesting information that the Pandya King; who was Kharavela's friend sent pearls and 'elephant ships' as presents to that well-known Monarch of Kalinga. It is stated that the Indian embassy to the Roman Emperor Augustus, that is mentioned by Strabo (A. C. 20) was sent by the Pandya King. Pliny

(A. C. 77) mentions the 'Pandian' ruler and his 'emporium of Modoura.' Ptolemy (A. C. 140) refers to 'Modoura the Kingdom of the Pandian.' Ancient Tamil literature of the Sangam period gives us a picture of the Pandiya Kingdom, which appears to have attained a very high degree of civilization, and of Pandya-Kings' who besides being great warriors were also great rulers. They were patrons of learning and not infrequently the scions of the royal house who could 'sweetly make and sweetly sing.'

Inscriptions tell us that about the close of the 6th century A. C., the Pandyas came in conflict with the Pallavas; and from both inscriptions and Tamil literature, we note that Nandivarman Pallava Malla gained victories over the Pandyas at Mannai and Nenmali (Vide Periya Tiru Moli II 9) in the 8th century. In the 9th century, the Pandyans became ascendant and apparently exercised control over the Chola territory (South Indian Inscriptions II, 364); and at Tiruppiambiam they won a victory over the Gangas (S. I. I. II. 381). According to the Mahavamsa, they also invaded Ceylon in the time of the Singhalese King Sena I. However at the close of the century, the Cholas would appear to have regained their power; and in the reign of Parantaka I (first half of the 10th century) the proud Pandyas for the first time appear to have fallen definitely under the supremacy of the Cholas. (Epi. Ind. V, 42; S. I. I. II. 379). The reverse that the Cholas sustained in a battle near Arkonam which they fought against the

Rashtrakutas about 949 A. C. was taken advantage of by the Pandyas, who rose in rebellion and defeated the Chola Aditya Karikala; but soon after, Rajaraja I (985—1013) again brought them into subjection, and the individuality of the Pandya was so completely wiped out that the very Pandya Kingdom came to be known as Rajaraja-Pandi-Nadu. The attempt of the Pandyas to throw off the Chola supremacy, in which they were assisted by the Chera King and the King of Ceylon, appears to have signally failed (S. I. I. III. 37 and 56).

Early in the 13th century the power of Cholas began to decline, and this enabled the Pandyas to establish themselves at Madura as independent ruler for about a century. All accounts agree in extolling the wealth, splendour and importance of the Pandya Kingdom during this period. It seems to have extended from Quilon to Nellore. Marco Polo tells us that Kayalpattinam was then a great emporium of extensive sea-borne trade. We find that during this period, the Pandya King sent an embassy to the famous Kubla Khan, the Mougol Emperor (1286A.C.) However, the canker of demoralization had already begun to eat into the vitals of the Pandya dynasty; and when at the beginning of the 14th century, a dispute about succession to the throne arose, one of the claimants sought the help of Allauddin, the Emperor of Delhi. This led to the well-known invasion of southernmost India by Malik Kafar in 1310. He sacked Madura, and all but razed the

famous temple to the ground. This invasion, which had been wantonly sought, so completely demoralized the Pandya Kingdom that it never afterwards regained its independence. Shortly afterwards, the Chera King invaded and conquered Madura, where he was crowned King (Epi. Ind. IV 146). Subsequently, a Musalman dynasty usurped the throne, and ruled for about 50 years, when it was overthrone by Kampanna of the Vijayanagar Kingdom in 1365 (Epi Ind. VI 324); and since then Madura was governed under the suzerainty of the Hindu Kingdom of Vijayanagar.

About 1532 the King of Travancore invaded the Pandya territory and defied Vijayanagar. Achyuta, who was then the King of Vijayanagar (1530—42) consequently organized an expedition into Southern India through which he marched in triumph, and planted a pillar of victory in the Tambravarani. He cemented his relations with the Pandya by marrying the latter's daughter.

We are now within sight of the Nayak dynasty of Madura which was founded in 1559, and which ruled for nearly two centuries, till Madura fell into the hands of Chanda Sahib in 1736. The origin of the dynasty and its doings are narrated by Mr. R. S. Narayanaswami Aiyar with clearness and precision in the following pages which I heartily commend to all lovers of Madura and its ancient and eventful history. I may add that the romantic element in the origin of the dynasty has already

been seized upon for the production in Tamil of two very excellent plays by two gifted Tamil poets and scholars, Pandit Sriman C. S. Muthuswami Aiyar of the Kalyanasundaram High School, Tanjore, and Pandit Sriman Gopalakrishna Aiyar of the Madura College, Madura ; and I cannot help expressing the hope that there will be found among the readers of Mr. R. S. Narayanaswami Aiyar's account of the rule of the Nayak kings, some, endowed with the requisite gift of sympathy, imagination and charm of literary expression who will, invest the outstanding figures of the Nayak period—Viswanatha, Aryanayakam, Tirumalai, and Mangammal with the flesh and blood of life and make them glow in the pages of historical novels or romances. In expressing this wish, I am not unaware that the estimate of that great European Missionary Dr. Caldwell, if not very flattering to the memory of the Nayaks. In his *History of Tinnevelly* he writes : "Judged not merely by modern European standard of right and wrong, but even by the standards furnished by Hindu and Mohamedan book of authority, the Nayakans must be decided to have fallen far short of their duty as rulers. Their reigns record little more than a disgraceful catalogue of debaucheries, treacheries, plunderings, oppressions, murders and civil commotions, relieved only by the factitious splendour of gifts to temples, idols and priests, by means of which they apparently succeeded in

getting the Brahmans and poets to speak well of them, and thus in keeping the mass of the people patient under their misrule." The learned bishop has certainly succeeded in tarring with one touch of his brush all imaginable persons—kings, priests, poets and people—whom in his abundant charity he regards only as knaves or fools; but his sweeping condemnation cannot in the light of facts of history be accepted, as unprejudiced. Indeed we may well linger with affection over the memory of Viswanatha, whose invincible loyalty was so sweetly wedded to high pious fidelity, who mindful of the sage advise of the ancient Tamil poet to

> Increase the reservoirs for water made,
> And bind the water, and supply to fields
> Their measured flow. (*Purananuru* 18)

led channels from the Vaigai to water the country, over which he founded smiling villages, and with the help of his able minister Aryanayaka Mudali, whose equestrian statue in the 1000 pillared Mantapam is still adorned with garlands by worshippers at the Madura temple, restored order in the land and affected many administrative improvements. Again, apart from his political doings, about the wisdom of some of which, opinions will differ to, us, Tirumalai, who made Madura the capital, and, whose public buildings, including the temple the splendid palace and that great Art Gallery of Indian sculpture, the *Pudu*

Mantapam, have been aptly described as " work of really royal magnificence " cannot fail to appeal to our finer susceptibilities, and our sense of admiration for the grand and the beautiful. Mangammal too, whose memory is still green through out the land for her innumerable roads and avenues, temples, tanks and choultries, cannot cease to be dear to the Indian mind, which will never fail to invest the noble lady with radiances. The doings of these and other Nayak rulers are described in this little book in simple language, and with faithful adhesion to history so far as it is now known ; and the author, whose activity for the furtherance of Tamil and the diffusion of knowledge among the Tamil people is manifold, deserves thanks for this fresh attempt to convey reliable information to Tamilians about one of the most fascinating chapters in the story of their land.

K. G. SESHA AIYAR,
(B.A., B.L., M.R.A.S.,)
High Court Judge.

Trivandrum

முகவுரை

நவீன நாகரீக பாஷைகளென, இப்போது, பேர்பெற்று விளங்கும் பாஷைகளெலாம் 'இருந்தனவோ' என்று சொல்லக்கூடிய முற்காலம் முதல் சிறப்புற்ருேங்கிய சில பாஷைகளில் நமது தமிழ் பாஷையொன்று. அப்படிப் பட்ட நமது தாய் பாஷை இப்போது சற்றுப் பெருமை குறைந்திருக்கக் காரணமென்ன ?

"காலதேச வர்த்தமானங்களுக்குத் தக்கவாறு மனித ரின் நடையுடை பாவனைகளும் மாறிவருவதுபோல பாஷைப் பெருமையும் பல காரணங்களைத்தழுவி இருக்கின்றது. அக் காலத்து ஆசார விவகாரங்களுக்குத் தக்கவாறு நமது முன்னேரும் நமது பாஷையில் பல நூல்களியற்றி இருக் கின்றனர். இப்போது நமது பள்ளிக்கூடங்களில், நவீன நாகரீகத்துக்கேற்ற பல புத்தகங்கள் பாடமாய் வைத்திருக் கின்றனர். அவைகளை விசேஷமாய் ஆங்கிலத்திலேயே கற்பித்து வருகிருர்கள். வயிறு நிரம்ப உண்ணச்சோறு கிடையாத அவ்வளவு எளிமை நிலையாயுள்ள நமது தேசத்தில் எல்லோரும் ஆங்கிலங்கற்கத்தக்க பொருளும், சௌகரியமும் அமையுமா? தமிழ் பாஷையிலேயே கற்பிக்கலாமென்ருலோ, தமிழில் தக்க முதல் நூல்களும், வழி நூல்களுமில்லையே ?" என்று ஒரே வார்த்தையில் ஆட்சேபித்து விடுகிருர்கள். இது ஒரு பெருங்குறையே! ஆயினும் தீராக்குறையல்ல. இக்குறையைத் தீர்க்க நமது தமிழறிஞர் பலர் பல நூல்கள் இயற்றிவருகிருர்கள்.

நானும், நாயக்கர் வம்சத்தரசர், செல்வநூல், ரசாயனநூல், இந்துதேசக் காலக்குறிப்புகள், என்ற நூல்களை என் சிற்றறிவுக்கெட்டியவரை ஒருவாறு இயற்றி னேன். மதுரைத் தமிழ்ச்சங்கம் செந்தமிழாசிரியர் அபி

மானத்தால் ஷை நூல்களும், மாதந்தோறும் செந்தமிழ்ப் பத்திரிகையில் பிரசுரமாகின. பாஷாபிமானத்தால் இவ்வாறு செய்யத் துணிந்தேனே யொழிய பாஷைத்திறமையாலல்ல. ஆயிரம் வருஷ ஆங்கில சரித்திரத்தையும், ஐரோப்பா சரித்திரத்தையும், பரீட்சைக்குப் படித்து உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விடையளிக்கத் திறமைவாய்ந்த நமது தேச அறிஞர் 100-வருஷத்துக்கு முன் ‘மதுரையின் நிலைமை என்ன?’ என்றால் பதிலுரைக்கமாட்டாது விழிக்கின்றனர். அது நமது கல்விமுறையிலுள்ள குற்றமே யொழிய அவ்வறிஞர் குற்றமல்ல. நமது முன்னோர் பெருமையும், நமது தேச முற்பெருமையும், அறிந்து உணர்ந்து, ஆனந்திக்க இயலாதவர்க்குத் தற்பெருமையுமிருக்கமாட்டாது. தற்காலத்தில் தற்பெருமை யில்லாதோர் வாழ்வு என்ன வாழ்வு? யந்திரங்களைப்போலே வேலைசெய்து தினந்தோறும் காலட்சேபம் செய்து வருவதே நமது சிறந்த தொழிலாய்விடுகிறது.

‘மதுரை நாயக்க அரசர்’ என்ற இச்சிறு சரித்திரம் கி. பி. 1559 முதல் 1736 வரையுள்ள பாண்டியதேசச் சரித்திரத்தைக் கூறுகின்றது.

இதை யபிமானித்து அழகிய முகவுரை எழுதிய திருவனந்தபுரம் ஹைக்கோர்ட்டு ஜட்ஜ் மகா-ள-ள-ஸ்ரீ கே. ஜி. சேஷய்யர் அவர்களுக்கு மனமுவந்த வந்தனமளிக்கிறேன்.

R. S. நாராயணஸ்வாமி ஐயர்,
பி.ஏ., பி.எல்.

மதுரை

புதுமண்டபத்தூண் சிலைகள்



பார்வதி கல்யாணம்

கஜசம்ஹார மூர்த்தி

மதுரை நாயக்க அரசர்கள்

நாயக்கர் வம்ச ஸ்தாபனம்

(1559—1736)

கிறித்து பிறந்து 16-ம் நூற்றுண்டின் நடுவில் பாண்டிய வம்சத்தைச் சேர்ந்த **சந்திரசேகரபாண்டியன்** மதுரையில் பட்டந்தரித்தான். அக்காலத்தில் மதுரை ராஜ்யம் க்ஷீணதசையடைந்து பல வேற்றரசர்கள் இம்சைக்குட்பட்டுக் கடைசியாய் விஜயநகர சமஸ்தானத் திற்கு ஓர் சிற்றரசாகவும் ஆய்விட்டது. பாண்டிய அரசர்கள் பலவீனர்களாகவும் தங்கள் அரசைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ள வலிமையற்றவர்களாகவும் ஆய்விட் டார்கள். இந்த நிலைமையில் முற்கூறிய **சந்திரசேகரன்** பட்டத்துக்கு வந்தான். அக்காலத்தில் விஜயநகர ராஜ்யத் தில் **ராமராயர்** அரசாண்டு கொண்டிருந்தார்.

சுமார் 1557-ம் ஆண்டில் தஞ்சையிலரசாண்ட வீர சேகரசோழன் மதுரைமீது படையெடுத்து வந்து பாண்டி யன் மீது வெற்றிபெற்றுப் பாண்டிய நாட்டைத் தனது ஆதீனத்திற்குட்படுத்திக் கொண்டான். சந்திரசேகர பாண்டியன் தன் மகனுடன் தப்பியோடி விஜயநகரம் சென்று ராமராயரைத் தஞ்சமடைந்தான்.

ராமராயர் அபயம்கூறி, உடனே ஒரு பெருத்த சேனை யைத் தன் தளகர்த்தன் **நாகமநாயக்கனுடன்** அனுப்பி ஞர். **நாகமன்** தஞ்சைமன்னனை வென்று மதுரைக் கோட்டையையும் மதுரை ராஜ்யத்தையும் கைவசப்படுத்திக்

கொண்டான். பிறகு தன் அரசன் கட்டளைப்படி பாண்டிய ராஜ்யத்தைச் சந்திரசேகரனிடம் ஒப்புவிக்காமல், தானே சுவாதீனமாய் அரசாள ஆரம்பித்துவிட்டான்.

இத்துரோகத்தையறிந்த **ராமராயர்** அதிக கோபங் கொண்டு தன் சபையோரை வரவழைத்து நாகமன் செய்த துரோகத்தை யவர்களுக்கு அறிவித்து "அத்துரோகியின் சிரசைக் கொய்துவரக்கூடிய திறமைவாய்ந்தவர் இச்சபை யில் ஒருவருமில்லையா?" என்று கோபத்துடனும் ஆத்திரத் துடனும் வினவினர். அங்குள்ளோர் ஒருவரையொருவர் பார்த்தாரே யொழிய ஒருவராவது பதிலுரைக்கத் துணிய வில்லை. இந்நிலைமையில் அதி ஆச்சரியமான சம்பவம் ஒன்று நேர்ந்தது. துரோகி நாகமன் புதல்வனுன விசுவ **நாத நாயக்கன்** சபைநடுவே எழுந்து நின்று தான் அக் காரியத்தைச் செய்வதாய் அரசனுக்கு அறிவித்தான். அரசன் முதலில் அவன்மீது சந்தேகங்கொண்ட போதிலும் பிறகு விசுவநாதன்மீது நம்பிக்கை கொண்டு தக்க சேனை யுடன் அவனை அனுப்பினுன். விசுவநாதன் மதுரைமீது படையெடுத்துச் சென்று தன் தகப்பனைத் தோற்கடித்து அவனைச் சிறைபிடித்து வந்து ராமராயரிடம் ஒப்புவித்தான். ராமராயர் மிக்க சந்தோஷத்துடன் விசுவநாதனை நோக்கி "உனக்கு என்ன வேண்டுமானுலும் அதைக் கூறுவாயாகில் நான் மனமுவந்து அளிக்கின்றேன்" என்ருர். விசுவ நாதன் தன் தகப்பனுக்கு உயிர்ப்பிச்சை யளிக்கவேண்டு மென்று பிரார்த்திக்க அவ்வாறே நாகமனைக் கொல்லாது விட்டு விட்டார். அத்துடன் கலகமும் ஒடுங்கிவிட்டது. 1599-ம் ஆண்டில் பாண்டியராஜனை மதுரை ராஜ்யத் தரசனுக முடிசூட்டி விசுவநாத நாயக்கனை விஜயநகர ராஜ்யப் பிரதிநிதியாகவும் பாண்டியனுக்கு உதவியாகவு மிருந்து மதுரையைப் பரிபாலனம் செய்துவரும்படி ராம ராயர் நியமித்தார்.

1. விசுவநாத நாயக்கன்

(1559—1563)

முற்கூறியவாறு பாண்டிய ராஜனுக்கு உதவியாகவும் விஜயநகரப் பிரதிநிதியாகவும் விசுவநாதன் மதுரையைப் பரிபாலித்துவந்தான். தனது சௌகரியத்தாலும் ஆட்சித் திறமையாலும், கலகக்காரரையெல்லாம் அடக்கி எங்கும் அமைதியை நிலைநாட்டினான். பாண்டியர்கள் கேவலம் பேருக்கு மாத்திரம் சிலகாலம் அரசர்களாயிருந்தார்கள். மதுரை ராஜ்யபரிபாலனம் முழுமையும், விசுவநாதனாலும் அவனுக்குப்பின் வந்த நாயக்கர்களாலுமே நடத்திவரப் பட்டது.

பொது நன்மைகள்

விசுவநாதன் காலத்தில் தேசத்தின் நன்மையான காரியங்கள் பல செய்யப்பட்டன. இவனுக்கு உதவியாய் இவனுடன் ஒத்து தர்மசிந்தனையுடன் வேலை செய்தவர் **ஆரியநாயக முதலி** என்பவர். இவர் தாழ்ந்த நிலைமையிற் பிறந்து விஜயநகர சமஸ்தானத்தில் உயர்ந்த பதவிக்கு வந்தவர். விசுவநாதனுக்கு உதவித் தளகர்த்தராய் மதுரை மீது படையெடுக்கையில் வந்தவர். விசுவநாதன் பிரதிநிதி யானதும் ஆரியநாயக முதலி விசுவநாதனின் ***தளவாய்** ஆக நியமிக்கப்பட்டார்.

துன்பமேற்பட்ட காலங்களில் தங்கள் ஊரைவிட்டு ஓடிப்போயிருந்த குடிகளெல்லோரும் திரும்பிவந்து விவசாயம், வியாபாரம், கைத்தொழில் முதலான தத்தம் தொழில்களைச் செய்யத் தொடங்கினார்கள். சிறிது காலத்திற்குள் தேசமெங்கும் செல்வமும் செழிப்பும் தழைத்

---

* குறிப்பு :—தளவாய், ராணுவத்தொழிலும் மந்திரித் தொழிலும் கூடிய உத்தியோகம்.

தோங்கின. ஆலயங்களும் அக்கிரகாரங்களும் ஆங்காங்கு நிர்மிக்கப்பட்டன. வைகையாற்றில் முற்காலத்தில் கட்டப் பட்டுள்ள பேரணை, சிற்றணையென்பவை இவர்களாலேதான் கட்டப்பட்டதென்று எண்ண இடமிருக்கின்றது. வைகை யாற்றில் அநேகம் பாசனக் கால்வாய்கள் வெட்டி நீர்வளமில்லாதிருந்த பல பாகங்களை நீர்வளமுடைய தாக்கினார்கள்.

திருச்சிராப்பள்ளி, ஸ்ரீரங்கம், ராமேசுவரம், முத லான தலங்களுக்குப் போகும் மார்க்கங்களெல்லாம் கள்ளர் பயத்திற்குட்பட்டிருந்தன. அதையடக்குதற்கு வேண்டிய முயற்சிகளை விசுவநாதனும், ஆரியநாயகனும் செய் தார்கள். தஞ்சை மன்னனுக்கு வல்லம் கோட்டையைக் கொடுத்துத் திருச்சிராப்பள்ளியைப் பரிவர்த்தனையாய்ப் பெற்று, அதன் கோட்டையைப் பலவிதமாய்ப் பலப் படுத்தினார்கள்.

ஆங்காங்குப் பலவிடங்களில் தக்க பாதுகாவல் செய்து கள்ளர் பயத்தை நீக்கினார்கள். யாத்திரை செல்பவர்கள் நிர்ப்பயமாய்த் தேசசஞ்சாரம் செய்ய ஆரம்பித்தார்கள்.

திருநெல்வேலி. விசுவநாதன் இவ்வாறு திருச்சிராப் பள்ளிச் சீமையைச் சீர்படுத்திக் கொண்டிருக்கையில் தளவாய் ஆரியநாயகமுதலி திருநெல்வேலிப் பிரதேசத்தைச் சீர்படுத்தச் சென்றான். "பஞ்சபாண்டவர்கள்" என்று பெயர் வகித்த ஐந்து தலைவர்கள் திருநெல்வேலிக் கயத்தார் என்னும் நகரத்தில் சுவாதீனமாய் ராஜ்யத்தை ஸ்தாபித்துக் கொண்டு நாயக்கர் அதிகாரத்தைத் தடுப்பதாய்ச் சபதம் செய்தார்கள். மதுரையிலாண்ட சந்திரசேகரனின் பாட்ட னுடைய தாசி புத்திரர்கள் என்றும், இவர்கள் வஞ்சனையால்தான் சந்திரசேகரன் ராஜ்யத்தை விட்டோடி விஜயநகரத்தரசனைத் தஞ்சமடைய நேர்ந்ததென்றும் சொல்லுவதுண்டு. ஆரியநாயகமுதலி பல முயற்சி

செய்தும் பயன்படவில்லை. இச்செய்திகேட்ட விசுவநாதன் பெருத்த சேனையுடன் திருநெல்வேலிக்கு விரைந்து சென்றான். தலைவர்கள் எதிர்த்துப் போர்புரியப் போதுமான சேனையும், பணமுமில்லாதவர்களானதால், காடுகளில் மறைந்திருந்து, சௌகரியமானபோது திடீரென்று தாக்கு வதும், ஓடிப்போவதுமாயிருந்து விசுவநாதன் சேனையைப் பலவாறு உபத்திரவப்படுத்தி வந்தார்கள்.

விசுவநாதன் ஒரு யுக்தி செய்தான். தலைவர்கள் ஐவரும் ஒன்றுகூடித் தன்னோடு சண்டையிட்டு அவர்கள் ஜயித்தால் அவர்கள் ராஜ்யத்தை யவர்களே ஆளவிட்டு விடுவதாயும், தான் ஜயித்தால் அவர்கள் ராஜ்யத்தை இழந்துவிட வேண்டுமென்றும், சொல்லியனுப்பினான். ஐவரும், தங்களில் ஒருவரே சண்டை செய்ய முன்வருவ தாய்ச் சொல்லி அந்த நிபந்தனைகட்குட்பட்டார்கள். பிறகு நடந்த அந்தக் கொடிய யுத்தத்தில் ஐவர் தலைவன் மரண மடைந்தான். ஒப்பந்தப்படி மற்ற நால்வரும் தங்கள் ராஜ்யத்தை இழந்து பரதேசஞ் சென்றார்கள். இவ்வாறு திருநெல்வேலிச் சீமையும் மதுரை நாயக்கர் ஆட்சிக்குட் பட்டது.

பாளையக்காரர்கள்

நாயக்கர் வருவதற்கு முன்னமேயே, மதுரை ராஜ்யத் தில் அநேக பிரதேசங்களை அநேக தலைவர்கள் என்ற சிற்றரசர்கள் ஆண்டுவந்தார்கள். இவர்கள் மதுரை அரசாட்சிக்குட்பட்டவர்களாய் மதுரை அரசர்க்குக் கப்பம் செலுத்தியும் வேண்டும்போது சேனையுதவி புரிந்தும் வந்தார்கள். முற்கூறியவாறு பாண்டிய வம்சம் வரவர க்ஷீணதசை யடைந்தபோது இத்தலைவர்கள் சுவாதீன மடைந்து கப்பங்களைச் சரியானபடி செலுத்தாமலும் நாடுகளில் கலகங்கள் செய்தும் வந்தார்கள்.

விசுவநாதனுக்கு முன்னமே, முஸ்லீம்கள் உபத்திரவம் பொறுக்காமல் ஆந்திரதேசத்தினின்றும் அநேக நாயக்கர்கள் ஓடிவந்து, பாண்டிய தேசத்தில் குடியேறியிருந்தார்கள். விசுவநாதனுடன் வந்தவர்கள் பலர். இவர்கள் எல்லோரும் தங்கள் ஜாதியரான விசுவநாதனிடம் விசுவாசமாயும், பட்சமாயுமிருந்தார்கள். விசுவநாதனும், ஆரியநாயக முதலியும் மதுரை ராஜ்யத்தை 72-பாளையப் பட்டுகளாகப் பிரித்து முன்னிருந்தவரில் யோக்கியமானவரை அவரவர் ஸ்தானத்தில் உறுதிப்படுத்தினதுடன், மற்றப் பாளையங்கள் ஒவ்வொன்றிலும், ஒவ்வொரு நாயக்கத் தலைவனை நியமித்தார்கள். தத்தமக்கு அளிக்கப்பட்ட ஜமீனை (பூமியை) ஆளுவதும், நாயக்கர் ராஜாங்கத்திற்கு வருடந்தோறும் வரி செலுத்துவதும், யுத்தகாலத்தில் சேனையுதவிசெய்வதுமே இவர்களுக்குக் கடமை. இவர்கள்தான் ***ஜமீன்தார்கள்** என்றும் †**பாளையக்காரர்கள்** என்றும் சொல்லப்படுவார்கள். நல்ல எண்ணத்துடன் செய்த இவ்வேற்பாடானது, பின்பு நாயக்கர் வம்சம் பலவீனமடைந்ததோடு, மதுரை சமஸ்தானத்திற்கே உபத்திரவமாய் முடிந்தது என்றே சொல்லலாம்.

முற்கூறியவாறு விசுவநாதன் காலத்தில் திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, என்னும் மூன்று ஜில்லா பாகங்களும் மதுரை நாயக்கர் ஆட்சிக்குட்பட்டுக் கலகங்களெல்லாம் நீங்கி அமைதி நாட்டப்பட்டுச் செல்வச் சீருடன் செழித்தோங்கத் தலைப்பட்டன. இவ்வாறு அமைதியுடனும், தன் தளவாய் ஆரியநாயக முதலியின் உதவியுடனும், சிறிது காலம் அரசாண்டு **விசுவநாதன்** 1563-ம் வருடம் மார்கழிமாசக் கடைசியில் மரணமடைந்தான்.

---

* ஜமீன்—பூமி, க்ஷேத்திரம், ஜமீன்தார்—பிரதேச சுவான்தார்.

† பாளையம்—சேனை, பாளையக்காரன்—சேனைத்தலைவன்.

2. குமாரகிருஷ்ணப்ப நாயக்கன்
(1563—1573)

1563-ம் ஆண்டில் விசுவநாத நாயக்கன் மகன் குமாரகிருஷ்ணப்ப நாயக்கன் பட்டத்திற்கு வந்தான். விஜயநகர, சமஸ்தானத்தின் மீது முஸ்லீம்கள் படையெடுத்து வருவதையறிந்து விஜயநகரத்துக்குதவியாய் மதுரைத் தளவாய் **ஆரியநாயகமுதலி** சென்றுவிட்டார்.

தும்பிச்சி நாயக்கன் கலகம்

தும்பிச்சி நாயக்கன் 72 பாளையக்காரர்களில் ஒருவன். இவன் கலகஞ்செய்து மதுரைமீது படையெடுத்துவரும் வழியில் பரமக்குடிக் கோட்டையைப் பிடித்துக்கொண்டான். குமாரகிருஷ்ணப்பன், தன் சேனைத்தலைவனை **பெரிய கேசவப்பன்** வசம் தக்க சேனையனுப்பக் கேசவப்பன் பரமக்குடி சென்று போர்புரிந்திறந்தான். பிறகு, கேசவப்பன் மகன் 18000 வீரர்களுடன் சென்று தும்பிச்சி நாயக்கனைத் தோற்கடித்து அவனைப் பிடித்து அவன் தலையை வெட்டி மற்றப் பாளையக்காரர்களுக்கு எச்சரிக்கை செய்ததோடு மதுரைக்கு அனுப்பினன். இத்துடன் பாளையக்காரர் கலகம் தொடக்கத்திலேயே அடங்கிவிட்டது.

கண்டிராஜன் போர்

தும்பிச்சி நாயக்கன் நண்பனை கண்டிராஜன் தன்னை இகழ்ந்து பேசினன் என்று கேள்விப்பட்டுக் குமாரகிருஷ்ணப்பன் தக்க சேனையுடன் நவபாஷாணத்தின் வழியாய்க் கடலைத்தாண்டி இலங்கை சேர்ந்து கண்டிமீது படையெடுத்துச் சென்றன். கண்டிராஜன் தன் நாலு

மந்திரிகளேயும் எட்டுத் தேச நாதர்களேயும் 40000 போர் வீரர்களுடன் மதுரைச் சேனேயை எதிர்க்க அனுப்பினுன். குமாரகிருஷ்ணப்பன் மிகுந்த சேனேயை மூலபலமாய்ப் பின்னே நிறுத்திவிட்டு, 20000 போர் வீரருடன் கண்டிச் சேனேயை எதிர்த்தான். கோரமான யுத்தம் நடந்தது. இருதிறத்திலும் மிகுந்த சேதம் ஏற்பட்டது. கடைசியில் மதுரைச் சேனே வெற்றியடைந்தது. கண்டி மந்திரிகளில் இருவரும் ஐந்து தேச நாதர்களும் சிறைப்பட்டார்கள். பிறகு கண்டிராஜன் 60000 சிங்களவருடனும் 8000 காபிர் களுடனும் தானே போர்புரிய வந்தான். கண்டிச் சேனே நாசஞ் செய்யப்பட்டுக் கண்டி ராஜனும் குமார கிருஷ்ணப்பன் எய்த அம்பினுல் இறந்தான். கண்டிநகர் நாயக்க அரசன் வசப்பட்டது. தன் மைத்துனனை விஜய கோபாலநாயக்கனேக் கண்டிப் பிரதிநிதியாய் நியமித்து விட்டுக் குமாரகிருஷ்ணப்பன் மதுரை வந்து சேர்ந்தான்.

1565-ல் நடந்த தலேக்கோட்டை யுத்தத்தில் விஜய நகரச் சேனே முஸ்லீம்களால் தோற்கடிக்கப்பட்டதோடு விஜயநகர மன்னனுகிய ராமராயரும் உயிரிழந்தார். விஜய நகரம் முஸ்லீம்களால் பாழாக்கப்பட்டது. அத்துடன் விஜய நகர சமஸ்தானத்தின் பெருமையும் குலேந்துவிட்டது. அத்துடன் விஜயநகரத்திற்கு ஆதீனமான மைசூர் ராஜ்யம் ஸ்ரீரங்க பட்டணத் தலேவனுக்கும், தஞ்சைநாடு வீரராகவ நாயக்கனுக்கும், மதுரைநாடு குமாரகிருஷ்ணப்பனுக் கும் அநேகமாய் சுவாதீனமாயின. ஆரியநாயகமுதலி தலேக்கோட்டைப்போரினின்றும் 1566-ல் மதுரைக்குத் திரும்பிவந்தான். அவனே இம்மூன்று தேசங்களுக்கும் தளவாயாக இருந்து காத்துவந்தான். தன் குடும்பத்தாரை யும் நண்பரையும், காஞ்சீபுரத்துக்கடுத்த பெருநாட்டி லிருந்து வரவழைத்து மதுரைக்கடுத்த சோழவந்தானில் குடியேற்றினுன்.

ஆரியநாயகமுதலியுதவியால், மதுரை ராஜ்யத்தில் கலகம், பஞ்சம் முதலான கொடுமைகளெல்லாம் நீங்கின. குமாரகிருஷ்ணப்பன், தேசக்ஷேமகரமான காரியங்களைச் செய்யத்தொடங்கினன். கிருஷ்ணபுரம், கடயங்கிருஷ்ண புரம் என்னும் கிராமங்களைத் திருநெல்வேலியில் ஸ்தாபனம் பண்ணினன். அநேக ஆலயங்களையும், அக்கிரகாரங்களை யும் தடாகங்களையும் நிர்மாணம் செய்தான்.

இவ்வாறு செங்கோல் செலுத்திவந்து 1573-ல் குமார கிருஷ்ணப்ப நாயக்கன் மரணமடைந்தான்.

3. கிருஷ்ணப்ப (பெரியவீரப்ப) நாயக்கன் விசுவநாதநாயக்கன் II

(1573—1595)

1573-ம்ஆண்டில் குமாரகிருஷ்ணப்பன் புதல்வர் கிருஷ்ணப்பன் என்ற பெரியவீரப்பனும் இரண்டாம் விசுவ நாத நாயக்கனும் **சேர்ந்து** பட்டத்திற்கு வந்தார்கள். ஆரியநாயக முதலியே ராஜ்யகாரியங்களை நிர்வகித்து வந்தார்.

மாவிலிவாணராஜன் கலகம்

மதுரையில் முன் அரசாண்டு வந்த மாவிலிவாணனது வம்சத்தவர்கள் காளையார்கோவிலில் குடியேறியிருந்தார் கள். அவர்கள் தங்கள்ராஜ்யத்தைக் கைப்பற்றக் கலகம் செய்ததாகவும், கலகம் அடக்கப்பட்டதாகவும் மாவிலி வாண ராஜனுக்குத் தக்கதண்டனை கொடுக்கப்பட்டதாக வும் சொல்லப்பட்டிருக்கிறது. 1595-ல் கிருஷ்ணப்பனும் அதற்கு முன்னமேயே விசுவநாதனும் காலஞ்சென்றார்கள்.

4. லிங்கய (குமாரகிருஷ்ணப்ப) நாயக்கன்

விசுவப்பன் என்ற விசுவநாதநாயக்கன் III (1595—1602)

1595-ம் ஆண்டில் கிருஷ்ணப்பன் இறந்ததும் அவன் மக்கள் லிங்கயன் என்ற குமாரகிருஷ்ணப்ப நாயக்கனும், விசுவப்பன் என்ற மூன்றும் விசுவநாத நாயக்கனும் சேர்ந்து பட்டத்திற்கு வந்தார்கள்.

1600-ம் ஆண்டில் ஆரியநாயகமுதலி மரணமடைந்தான். அவன் உள்ளவரை மதுரைராஜ்யமானது கன்னியாகுமரி முதல் வடக்கே வாலிகொண்டபுரம் வரைக்கும் கீழ்க்கடல் முதல் மேற்குமலைத்தொடர் வரைக்கும் பரவியிருந்தது. மதுரை நாயக்கர்கள் விஜயநகர ராஜவம்சத்தவர் ஆதீனத்தை அங்கீகரித்தே வந்தார்கள். இவன் இறந்ததும் மதுரையின் சுவாதீனம் அதிகரித்துவிட்டது. மதுரை ஆயிரக்கால் மண்டபம் ஆரியநாயகமுதலியால்தான் கட்டப்பட்டதென்று சொல்லப்படுகிறது. மதுரைப் பாளையக்காரரர் ஏற்பாடு இவரால்தான் ஏற்பட்டது. மதுரை புதுமண்டபத்தில் இவர் உருவச்சிலையொன்று இருப்பதைப் பார்க்கலாம்.

1602-ம் வருடம் வரை மதுரைப்பெருமாள் கோவில் வாயில் நிலைப்படியில் தோன்றும் கற்சிலையால் விஜயநகர ஆதீனம் போகவில்லையென்று வெளியாகும்.

1602-ம் ஆண்டில் லிங்கயனும் அதற்கு முன்னமே விசுவநாதனும் காலம்சென்றுர்கள்.

5. முத்துகிருஷ்ணப்ப நாயக்கன் (1602—1609)

1602-ம் ஆண்டில் லிங்கயன் இறந்தும், அவன் மகன் முத்துக்கிருஷ்ணப்பன் பட்டத்திற்குரியவனுயினுன். ஆயினும் முத்துக்கிருஷ்ணப்பனது சிற்றப்பன் கஸ்தூரிரெங்கயன் என்ற ஒருவன், மதுரை ராஜ்யத்தை அபகரித்துக் கொண்டான். முத்துக்கிருஷ்ணப்பன் நண்பரில் சிலர் இதையறிந்து, கஸ்தூரிரெங்கயனைப் பட்டத்திற்குவந்த ஒரு வாரத்துக்கெல்லாம் கொலைசெய்து விட்டார்கள். பிறகு முத்துக்கிருஷ்ணப்பன் சந்ததி முறைப்படி பட்டத்திற்கு வந்தான்.

சேதுபதி சமஸ்தானம்

இராமேசுவரம் என்பது தென் இந்தியாவில் கிழக்குக் கரையையடுத்த ஓர் சிறு தீவு என்பதும், அது புண்ய ஸ்தலங்களில் ஒன்று என்பதும், ஸ்ரீராமன் இலங்கைமீது படையெடுத்துச் சென்றபோது இங்கே தங்கி ராமலிங்க சுவாமி பிரதிஷ்டை செய்தாரென்பதும், அது முதல் நமது இந்து தேசத்தில் பலவிடங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் அனுதினமும் வந்துகொண்டிருக்கிருர்கள் என்பதும் யாவரும் அறிந்த விஷயம்.

நமது சரித்திர காலத்திலும் அதற்கு முற்காலத்திலும் ராமநாதபுர ராஜ்ய முழுதும் பெரியவனமாகவும், துஷ்டர்களும், திருடர்களும், துஷ்டமிருகங்களும் வசிக்கும் இடமாகவும், யாத்ரீகர்களுக்குப் பாதுகாப்பற்றதாகவும் இருந்தது. அப்படிப்பட்ட நாட்டை முற்காலமுதல் சேதுபதி என்ற சில தலைவர் காத்துவந்து, மதுரைப்பாண்டிய ஆட்சிக் குட்பட்டுக் கப்பமும் கட்டிவந்தார்கள்.

சேதுபதி ராஜ்யத்தைப்பற்றிய சில சரித்திரக்குறிப்புக் கள் நெல்சன் துரையவர்கள் தன் மதுரை மான்யுவல் என்னும் நூலில் பின்வருமாறு வரைந்திருக்கின்றார்.

முதல் * சேதுபதி இராமனால் நியமிக்கப்பட்டான். கரையோரமுள்ள வனப்பிரதேசம் அவனுக்களிக்கப்பட்டது.

சோழன் ஒருவன் பாண்டியன்மீது படையெடுத்து வந்தபோது அதிவீரரகுநாதசேதுபதி என்பவன் பாண்டிய னுக்கு உதவியாயிருந்து சோழனைத் தோற்கச்செய்தான். அதற்குப் பிரதிப்பிரயோசனமாகத் தொண்டித்துறைமுகம் சேதுபதிக்குப் பாண்டியனால் அளிக்கப்பட்டது.

கன்னடமன்னர் பாண்டியன்மீது படையெடுத்துவந்த போது பரபீதிசேதுபதி என்பவன் பாண்டியனுக்கு உதவி யாய்ப் போர்புரிந்து கன்னடமன்னரைத்துரத்திப் பாண் டிய வம்சப்பிரதிஷ்டாபகன் என்ற பெயரும் பெற்றான். அக்காலத்தில் திருச்சுழி, பள்ளிமடம், திருப்புவனம் என்னும் நாடுகள் சேதுபதிக்கு விடப்பட்டன.

தெலுங்கர் சோழன்மீது படையெடுத்துச் சோழனைத் துரத்தியபோது சோழன் பாண்டியனை உதவிகேட்கப் பாண்டியன் வரதுங்கரகுநாத சேதுபதியையனுப்ப சேது பதி தெலுங்கரை முறியடித்துத் துரத்திவிட்டு 'சோழ வம்சஸ்தாபகன்' என்ற பெயர் பெற்றான்.

பின் ஒருக்கால் ஒரு சோழன் பாண்டியன்மீது படை யெடுத்து வந்தபோது குலோத்துங்கரகுநாத சேதுபதி என்பவன் அவனைத் தோற்கடித்துப் பட்டுக்கோட்டை யையும் அரந்தாங்கியையும் பிடித்துத் தன் ராஜ்யத் துடன் சேர்த்துக் கொண்டு, 'கண்ட நாடு கொண்டு கொண்ட நாடு கொடாதான்' என்ற பெயரும் பெற்றான்.

பின்பு சோழனுக்கும் பாண்டியனுக்கும் நேர்ந்த எல்லை

---

*சேது = அணை = ராமேசுவரம்போகும் அணை.
பதி = காவலன். சேதுபதி = அணைக்காவலன்.

வழக்கை **சமரகோலாகல ரகுநாதசேதுபதி** என்பவன் ஒருவன், பட்சபாதமன்னியில் தீர்த்துவைத்ததாகவும், அதற்குச் சோழன் மன்னர்கடல் முத்துச்சிலாப உரிமையைச் சேதுபதிக்கு அளித்ததாகவும், **ராஜ ராஜன், ராஜமார்த்தாண்டன், ராஜகம்பீரன்** என்ற பெயர்கள் பாண்டியனளித்ததாகவும் சொல்லப்படுகிறது.

விஜயநகர சமஸ்தானச்சேனை முஸ்லீம்கள்மீது படையெடுத்தபோது, பாண்டியன் ஆணைப்படி சேதுபதி தனது மறவர்சேனையுடன் சென்று விஜயநகர அரசர்பக்கம் போர் புரிந்தான். அப்போது மன்னார்கோவில், திருவாரூர், தேவகோட்டை என்னும் சீமைகளும் வானரக்கொடியும், கருடக்கொடியும் விருதாக அணியும் உரிமையும் சோழன் அளித்தான்.

இவைகளெல்லாம் இராமநாதபுரம் சமஸ்தானத்தில் சுமார் 50 வருடங்களுக்குமுன் திவானாகயிருந்த ஸ்ரீமான் பொன்னுசாமித் தேவரவர்களால் கொடுக்கப்பட்ட குறிப்புகள். இவைகளின் உண்மையும் மற்றுமுள்ள விவரங்களும் சரித்திர ஆராய்ச்சிகளால் அநேகமாய் நிச்சயிக்கப்படவேண்டியவை.

இதனால் நாம் முக்கியமாய் அறிந்துகொள்வதாவது:— (1) சேதுபதியரசர்கள் வெகு காலமாய்ப் பாண்டிய அரசாட்சிக்குட்பட்ட சிற்றரசர்களாகவே இருந்திருக்கிறார்கள். எக்காலத்திலும் மற்றவர்கள் தென்இந்தியாவில் சுவாதீனமுள்ள அரசர்களாயிருந்ததில்லை. (2) 16-ம் நூற்றாண்டு ஆரம்பத்தில் விஜயநகர அரசரின் அதிகாரம் பெயருக்கு மாத்திரம் இருந்ததேயொழிய வேறல்ல. அக்காலத்தில் * **போகலூர்** என்னும் ஊரில் சிற்றரசனாகயிருந்த **சடை**

* போகலூர் இது தற்போது மதுரை இராமநாதபுரம் ரயில் பாதையிலுள்ள சத்திரக்குடி என்னும் ஸ்டேஷனிலிருந்து அரைமைலுக்குள்ளாக இருக்கிறது.

யத்தேவன் உடையான் என்பவனை முத்துக்கிருஷ்ணப்பன் சேதுபதியாக ஏற்படுத்தினான். இவன் 72 பாளையக்காரர்களுக்கும் தலைவனானான். சடையத்தேவன் உற்சாகமாகவும், விசுவாசத்துடனும் வேலைசெய்தான். அக்காலத்தில் பாதைகளில் கள்ளர்களால் ஏற்பட்ட தொந்திரவு, திருட்டு முதலானவைகளையடக்கி யாத்ரீகர்களுக்குச் சௌகரியங்கள் பல செய்தான். மதுரை சமஸ்தானத்திற்குக்காலம் தவறாது கப்பமும் செலுத்திவந்தான். இவன் காலத்தில்தான் இராமநாதபுரம் கோட்டையும் கட்டப்பட்டது.

முத்துக்கிருஷ்ணப்பன் காலத்தில் அநேக கோவில்களும் குளங்களும், தெருக்களும், சாலைகளும் உண்டாக்கப்பட்டன. இவன் 1609-ம் வருடம் காலஞ்சென்றான்.

6. முத்துவீரப்ப நாயக்கன்

(1609—1623)

முத்துக்கிருஷ்ணப்பனுக்கு, முத்துவீரப்பன், திருமலை, குமாரமுத்து என்று மூன்று புதல்வர்கள் இருந்தனர். அவர்களில் மூத்தவனான முத்துவீரப்பன் பட்டத்திற்கு வந்தான். இவன் காலத்தில் அதிசயமான சம்பவங்கள் ஒன்றும் நேர்ந்ததாய்த் தெரியவில்லை.

சண்டைகள்

இவனுடைய அரசாட்சித் தொடக்கத்தில் தஞ்சை மன்னனோடும், மைசூர் அரசனோடும், சில சண்டைகள் நடந்தன. மைசூரிலிருந்து முஸ்லீம் படைகள் வடமேற்குப்பிரதேசங்களில் படையெடுத்துத் திண்டுக்கல்வரையில் வந்தார்கள். விருபாட்சியிலுள்ள பாளையக்காரன் அவர்களை முறியடித்துத் துரத்திவிட்டு, தனக்கு 'பாதைக்

காவல்' என்ற பட்டப்பெயரும் வைத்துக்கொண்டதாகத் தெரியவருகிறது. இதுதவிர, மொகலாயசேனை படையெடுத்து வந்தகாலத்தில் நடுக்கட்டளையிலுள்ள **சின்னக் காத்திரன்** என்ற பாளையக்காரன் அவர்களை முறியடித்துத் துரத்தினதாகவும், அதற்காக முத்துவீரப்ப நாயக்கனால் திண்டுக்கல் சீமை முழுமைக்கும் தலைவனுக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

கிறித்தவ மதம்

பதினாரும் நூற்றாண்டு இறுதி முதல் மதுரை பாண்டிய ராஜ்யத்தில் கிறித்தவ மதம் பரவத் தொடங்கியதாய்த் தெரியவருகின்றது. அக்காலத்திலுள்ள அரசர்கள் இதர மதங்களுக்கு இடையூறு செய்யாத பெருந்தன்மையுடையவர்களாயிருந்தனர். முதன்முதல் கிறித்தவ மதப் பிரசாரத்தைப் போர்ச்சுகீஸ் ஜாதியாரே கைக்கொண்டிருந்தனர். சமுத்திரக் கரையோரத்தில் வசிக்கும் பரவர் என்ற செம்படவச் சாதியாரே அம்மதத்தில் அதிகமாகச் சேர்ந்திருந்தார்கள். 1609-ம் வருடத்திற்கு முன்னதாகவே மதுரையில் ஒரு கிறித்தவ ஆலயம் உண்டாயிருந்ததாய்த் தெரியவருகின்றது.

மேற்கண்ட சரித்திர காலத்தில் **பெர்னண்டஸ்** துரை பாதிரி உத்தியோகம் செய்துவந்தார். அவர் தமக்கு அந்நிய மதஸ்தராயிருந்த வடுகர் முதலானவரைத் தம் மதத்தில் சேர்க்க அதிகமாக முயன்று வந்தார்.

ஆயினும் அவர் தேசத்தவரான போர்ச்சுகீஸ் ஜாதியார் பசு மாம்சம், மதுபானம், முதலான கெட்ட வழக்கங்களாலும், மற்றுமுள்ள கெட்ட எண்ணங்களாலும் **பரங்கியர்** என்று எல்லோராலும் இகழப்பட்டு வந்தார்கள். அதனால் பெர்னண்டஸ் பாதிரியார் முயற்சி பலன்பெருமற் போய்விட்டது.

இந்த நிலைமையில் 1606-ம் வருடத்தில் **ராபர்ட் டி. நோபிலிபஸ்**, என்னும் பாதிரியார் வந்துசேர்ந்தார். இவர் வரும்பொழுதே காவி உடை முதலான சந்நியாசி வேடந் தரித்து வந்து சேர்ந்தார். தான் பரங்கியர் ஜாதியல்லவென்றும், ரோமாபுரி பிராமண சந்நியாசியென்றும் அத்தேசத்தரசன் இப்புதிய மதத்தை இத்தேசத்தில் பிரசாரம் செய்யும்படி தன்னை அனுப்பியிருப்பதாகவும் சொல்லிக் கொண்டார். கழுத்தில் ஐந்து வடங்கள் உள்ள பூணூலும், அதில் சிலுவையும் அணிந்திருந்தார். கொஞ்சம் பாலும் அன்னமும் காய்கறிகளும் புசித்து வந்தார். மாம்சம் அவர் உண்பதேயில்லை. இவர் வேடத்தைக் கண்டு ஜனங்கள் நம்பி மயங்கினார்கள். அந்தணரும், மற்றுமுள்ள அறிஞர்களும், அரசர்களும், பிரபுக்களும் அவரைப் பார்க்க வந்தார்கள். அவர் சீக்கிரத்தில் தமிழ்ப் பாஷையைக் கற்றுக்கொண்டு அதில் பிரசங்கமும் தர்க்கமும் செய்ய ஆரம்பித்தார். இவரால் வெகுவிரைவில் கிறித்தவ மதம் பரவிவிடும்போல் தோன்றிற்று.

இந்த நிலைமையில் ஓர் இடையூறு நேர்ந்தது. ராபர்ட் டி. நோபிலிபஸ் பாதிரியார் இந்து சமயாசாரியரான அந்தண குருக்களுக்கும் விரோதமானார். தன் ஜாதியாரான பெர்னாண்டஸ் பாதிரிக்கும் விரோதமானார். இவர் கதி திரிசங்கு சுவர்க்கமாய் முடிந்தது. இவர்மேல் பலவித குற்றங்களை இவர் ஜாதியாரே சாற்றினார்கள்.

அவையாவன :—

(1) பாதிரி என்னும் பெயரைவிட்டுப் பிறமதத்தின் பெயரான குரு என்னும் பட்டத்தை வைத்துக்கொண்டார்.

(2) தான் பரங்கியல்லவென்று பலதடவை மறுத்திருக்கின்றார்.

(3) தன் மத சம்பந்தமான பரிபாஷைகளை அநாகரீகமான தமிழ்ச்சொற்களில் மொழிபெயர்த்து உபயோ

கித்து அதனுல் தன் மதத்திற்கே குறைவை ஏற்படுத்தி விட்டார்.

(4) தன்னுல் கிறித்தவ மதத்தில் சேர்க்கப்பட்டவர்கள் அவரவர் பூர்வ மதாசாரணைப்படி குடுமி வைத்துக் கொள் ளவும், பூணூல் தரிக்கவும், நெற்றியில் சந்தனம் முதலான குறிகளணியவும், சிரார்த்தம் சந்தியாவந்தனம் முதலான காரியங்கள் செய்யவும் இடங்கொடுத்தார் என்பனவாம்.

கோவாவிலுள்ள விசாரணைக் கர்த்தர்கள் இக்குற்றங் களை நன்ருய் விசாரணை செய்து நோபிலிபஸ் பாதிரி செய் தது குற்றந்தானென்றும் தீர்மானித்து, அவர் அதுமுதல் பத்து வருஷகாலம் பிரசங்கமே செய்யக்கூடாதென்றும் உத்திரவு செய்துவிட்டார்கள். நோபிலிபஸ் முயற்சியும் இத்துடன் நின்றுவிட்டது. இதனுல் கிறித்தவ மதப் பெருக் குக்கே ஒரு தடையும் ஏற்பட்டது.

இச்சமயத்தில் முத்துவீரப்பன் காலஞ்சென்ருன்.

7. திருமலை நாயக்கர்

(1623—1659)

முத்துவீரப்பன் மகன் **திருமலை நாயக்கர்** 1623-ம் வருடம் ஜனவரி மாதம் பட்டத்திற்கு வந்தார்.

மதுரை தலைநகரானது

திருமலை நாயக்கர் பட்டத்திற்கு வந்து பத்து வருடம் வரையில் திருச்சிராப்பள்ளியையே தலைநகராக வைத்துக் கொண்டு அரசாண்டு வந்தார். பிறகு, மதுரை தலைநக ரானதற்கு ஒரு காரணம் கூறுவதுண்டு. திருமலைநாயக்கர் சிலகாலம் பீனஸ வியாதியால் வருந்திக்கொண்டிருந் தார். அவர் ஒரு காலத்தில் மதுரைக்கு வரும் வழியில் திண்டுக்கல்லில் தங்கியிருந்தார். ஒரிரவில் மதுரை

மீனுட்சி சுந்தரேசுவரர் அவர் கனவில் தோன்றி அவர் மதுரைக்கே வந்துவிடும் பட்சத்தில் அவர் வியாதி குண மடைந்துவிடுமென்று வாக்களித்ததோடு விபூதியும் கொடுத்துச் சென்றதாய்க் கனவு கண்டார். மறுநாட் காலைமுதல் அவர் வியாதி கொஞ்சம் கொஞ்சமாக விலகத் தொடங்கிற்று. மதுரைக்கு வருவதற்குள் முற்றிலும் சௌக்கிய மாய்விட்டது. மதுரைக்கு வந்தவுடன் தன் வியாதி சௌக்கியமானபடியால் மதுரையிலேயே தங்கிவிடுவ தெனத் தீர்மானித்தார். அன்று முதல் மதுரையையே தலைநகராக்கிக்கொண்டு மீனுட்சியம்மனிடம் செங்கோல் பெற்று அரசுபுரிந்து வந்தார். மதுரை அன்றுமுதல் தலைநகராயிற்று.

மதுரை சிறப்பிக்கப்பட்டது

பல தேசத்தினின்றும் சிறந்த சிற்பிகளை வரவழைத்து அவர்களைக் கொண்டு பெரிய மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் நகரமெங்கும் கட்டப்பட்டன. மீனுட்சியம்மன் கோபுரங்களும் கோவில் வெளிப்பிரகாரங்களும் முறையே புதுப்பிக்கப்பட்டன.

திருமலை நாயக்கர் மகால் என்ற பெயரோடு, தான் வசிப்பதற்கு ஒரு பெரிய அரண்மனை கட்டினுர். இந்த அரண்மனையானது மர உத்திர சம்பந்தமே யில்லாமல் முழுதும் கட்டிடத்தாலேயே கட்டப்பட்டது. இந்த அரண்மனையைத் தினந்தோறும் பல தேசங்களி னின்றும் ஜனங்கள் பார்க்க வருகிறுர்கள்.

இன்னும் மீனுட்சி கோவிலுக்கு உயர்ந்த ஆபரணங்களும், பரிவட்டங்களும், வாகனங்களும், தேர்களும், திருப்பணிகளும் அளிக்கப்பட்டன. புதிது புதிதாய் ஆலயங்களும் தெருக்களும் பெரிய வீதிகளும் ஆங்காங்கு அமைக்கப்பட்டன. வித்துவான்களும், பிரபுக்களும், வணிகர்

களும் பல தேசத்தினின்றும் வந்து குடியேறினார்கள். இவ்விதமாக மதுரை நகர் அது முதல் தென்னிந்தியாவில் சீரும் சிறப்புமுற்று ஓங்கி வருகின்றது.

இவர், திருமலைநாயக்கர் மகால் கட்டுவதற்குச் செங்கல் செய்வதற்காக மதுரையிலிருந்து கிழக்கே ஒரு மைல் தூரத்தில் நல்ல மண்ணுகை இருந்த படியால் அவ்விடத்திலிருந்து வெட்டியெடுத்து வந்தார். மகால் கட்டி முடிந்த பிறகு செங்கல் எடுக்கப்பட்ட இடமானது பெரிய பள்ளமாக இருந்தது. அவர் தன்னுடைய மந்திரியைக் கலந்தாலோசித்தார். மந்திரியின் யோசனைப்படி அந்தப் பெரிய பள்ளத்தை ஒரு தெப்பக்குளமாகச் செய்தார். நாலாபக்கங்களிலும் கைப்பிடிச்சுவர் எடுத்தார். நடுவில் மண்டபமொன்று கட்டி அதில் அநேக பழந்தரும் மரங்களை யுண்டாக்கினார். அவர் பிறந்த நட்சத்திரமான தைமாதத்துப் பூசநட்சத்திரத்தில் மீனாட்சியம்மனுக்கு அதில் தெப்ப உத்சவமும் நடத்தினார். அந்த உத்சவம் இன்றும் நடைபெறுகின்றது.



மதுரைக் கிழக்குக் கோபுரம்

தற்போது மீனுட்சியம்மன் கோவிலிலிருந்து சுந்தரேசுவரர் கோவிலுக்குள் நுழையும் பாதையிலிருக்கும் பெரிய



திருமலைநாயக்கர்

விநாயகருடைய விக்கிரகமானது செங்கலுக்காக மண் தோண்டும்போது அந்தத் தெப்பக்குளத்திலகப்பட்டதாகவும் சொல்லுவதுண்டு.

விஜயநகர ராஜ்யத்தை யரசாண்டு வந்த பெண்ண கொண்டா வம்சம் 1613-ம் வருடத்தோடு க்ஷீணதசை யடைந்து முடிந்துவிட்டது.



வண்டியூர்த் தெப்பக்குளம்

பிறகு வந்த அரசர்கள் பலமற்றவர்களாயும் அரசாட்சித் திறமை குறைந்தவர்களாயும் இருந்தார்கள். திருமலை நாயக்கர் ஆட்சிக்கு வந்ததும் சுவாதீனம் பாராட்ட ஆரம்பித்து விட்டார். இதனால் விஜயநகர ராயருக்கும் மதுரை சமஸ்தானத்திற்கும் யுத்தம் நேரிடும்போல் தோன்றிற்று. திருமலைநாயக்கர் ஆங்காங்குள்ள தன் கோட்டைகளை யெல்லாம் பலமாகக் கட்டி வந்ததோடு பலத்த சேனைகளையும் வைத்திருந்தார்.

மைசூர்ச் சண்டை

திருமலைநாயக்கர் முதல் முதல் மைசூர் அரசரோடு யுத்தம் செய்யும்படி நேரிட்டது. அக்காலத்தில் மைசூரில் **சாமராஜ உடையார்** அரசாண்டு வந்தார். மதுரை

ராஜ்யத்தின் செல்வத்தையும் செழிப்பையும் பற்றி முன்னமேயே மைசூர் அரசன் கேள்விப்பட்டிருந்தான். அத்துடன் கூட சில வருடங்களுக்குமுன் தனக்கு மதுரையரசரால் ஏற்பட்ட அவமானத்தையும் நினைத்து, மதுரைராஜ்யத்தைக் கைப்பற்ற எண்ணினான். உடனே மைசூர் அரசன் தன் முக்கிய சேனாதிபதியான ஹரஸூரநந்தி ராஜனுடன் ஒரு பெருத்த சேனையை வெற்றிகொண்டு வருமாறு அனுப்பினான். அச்சேனை மைசூர்க் கணவாயைத் தாண்டி மதுரை ராஜ்யத்தின் வடமேற்குப் பிரதேசங்களைக் கைப்பற்றிக்கொண்டு கடைசியாய்த் திண்டுக்கல் கோட்டையையும் முற்றுகைபோட்டது.

அச்சமயம் மதுரை ராஜ்யத்தின் தளவாய் **இராமப்பையர்** என்பவர். மைசூர் அரசன் படையெடுத்து வந்ததைத் திருமலைநாயக்கர் அறிந்ததும், இராமப்பையரை ஒரு பெருத்த சேனையுடன் வெற்றிபெற்றுவரும்படி யனுப்பினார். இராமப்பையர் சேனையுடன் சென்று ஆங்குள்ள பாளையக்காரர்களையும் சேர்த்துக்கொண்டு மைசூர் சேனையை யெதிர்த்துக் கொடிய யுத்தஞ்செய்தார். கடைசியாக, சிரமத்துடன் வெற்றியும் பெற்றார். மைசூர்ச்சேனை முறியடிபட்டு வந்த வழியே ஊர்போய்ச் சேர்ந்தது.

இராமப்பையர் அவர்களைத் துரத்திச்சென்று மைசூர் ராஜ்யத்திற்குட் பிரவேசித்துத் தலைநகரையே தாக்கி முற்றுகை போட்டார்.

இந்த நிலைமையில், இராமப்பையருக்கு மதுரையில் அநேக விரோதிகளிருந்தார்கள். அவர்கள் இராமப்பையர் மைசூர்ச்சேனையை முறியடித்து வெற்றிபெற்றதைக்கேட்டவுடன் பொறாமைப்பட்டு, திருமலைநாயக்கரிடம் அவரைப் பற்றித் துர்ப்போதனைகள் செய்தார்கள். அவர்கள் பேச்சைக் கேட்டுத் திருமலைநாயக்கரும் இராமப்பையர்மேல் சந்தேகம் கொண்டார்.

இராமப்பையர் மைசூர்த் தலைநகரை அநேகமாய்ப் பிடிக்குந்தருணத்தில், அவரைச் சேனைத்தலைமையினின் றும் நீக்கிவிட்டதாய் அரசனிடமிருந்து உத்திரவு வந்து சேர்ந்தது. என்ன செய்வார் பாவம்! அரசனுடைய உத் திரவை மீறுவாரா? அல்லது பகைவருடைய அவமானத் திற்குள்ளாவாரா? ஆயினும் அவருக்கு அரசன் மீது இருந்த விசுவாசத்தாலும் எடுத்த காரியத்தை முடிக்க வேண்டியிருத்தலாலும் முற்றுகையை மும்முரமாய் நடத் திப் பகைவரை வென்று வெற்றி முரசுடன் திரும்பிவந்தார். வரும்போது மதுரைக்குச் சிறிது தூரத்தில் தங்கி, தன் சேனைகளை எல்லாம் அனுப்பி விட்டுத் தன் நண்பனை **இரங்கண்ணநாயக்கனை** அரசனிடம் முன்னதாகவே யனுப்பிப் பிறகு தானும் அரசன் சந்நிதானம் போனர். திருமலைநாயக்கர் முன்னம் இராமப்பையரைச் சேனைத் தலைமையினின்றும் நீக்கியிருந்ததாக உத்திரவு அனுப்பி யிருந்தபோதிலும் அவரைப் பார்த்ததும் அகமகிழ்ந்து நல் வரவு கூறி யுபசரித்தார்.

இராமநாதபுரக்கலகம்

மைசூர்ச் சண்டை முடிந்ததும் இராமநாதபுரக்கலகம் ஆரம்பமாயிற்று. முதல் சேதுபதி 1621-ம் வருடம் இறந் ததும் அவன் மகன் **கூத்தன்** என்பவன் பட்டத்திற்குவந்து 1621-ம் வருடம் முதல் 1635-ம் வருடம் வரை இராமநாத புர ராஜ்யத்தை அரசாண்டு பின் காலஞ்சென்ருன்.

பிறகு அவன் இறந்துபோகவும் அவன் மகன் **இரண் டாம் சடையத்தேவன்** என்ற **சேதுபதித்தளவாய்** பட்டத்திற்கு வந்தான். இவன் பட்டத்திற்கு வந்த இரண்டு மூன்று வருடத்திற்குள் தன்னுடைய தத்துப்புத்திரனை **இரங்கநாதத்தேவனிடம்** ராஜ்யத்தை ஒப்புவிக்கப் போவதாய் விளம்பரஞ்செய்தான். அதன்படியே ராஜ்யத்

தையும் அவனிடம் ஒப்புவித்தான். இதன் காரணம் இன்னதென்று தெரியவில்லே. காலஞ்சென்ற கூத்தனுடைய தாசி மகனுன தம்பி என்பவன் இதை ஆட்சேபித்தான். தம்பி மதுரைக்கு ஓடி வந்து சில மந்திரிகளேத் தன்பக்கஞ் சேர்த்துக்கொண்டு, தன் உரிமையை நிலேநாட்டும்படி அரசனே வேண்டிக்கொண்டான்.

திருமலேநாயக்கரும் அதற்கு இணங்கித் தன் சேனேத் தலேவர்களாகிய இராமப்பையரையும் இரங்கண்ண நாயக்கரையும் பெரிய சேனேயுடன் அனுப்பினுர். மதுரையிலிருந்து வந்த சேனே இராமநாதபுரத்தை முற்றுகை போட்டுக் கைப்பற்றிக்கொண்டது. இரண்டாம் சடையத்தேவனுடைய தத்துப்புத்திரனுன இரங்கநாதத்தேவன் பயந்து ஓடிப்போய் இராமேசுவரம் தீவில் ஒளித்துக் கொண்டான். தளவாய் இராமப்பையர் அவனேத் துரத்திச் சென்று, பாம்பன்வரை ஒரு அணேகட்டி இராமேசுவரத்திற்குள் நுழைந்தார். அத்தருணம் இராமப்பையர் தேக அசௌக்கியமாயிருந்து திடீரெனக் காலஞ்சென்ருர்.

இராமப்பையருடைய மகள் புருஷனுன சிவராமையர் சேனேத்தலேமையை வகித்தார். இராமேசுவரத்தீவில் நடந்த போரில், மதுரைச்சேனேயே வெற்றிபெற்றது. சிவராமையர் இரங்கநாதத்தேவனேச் சிறைப்பிடித்து வெற்றிக்கோலத்துடன் மதுரைக்குத் திரும்பிவந்தார்.

அதன்பின் தம்பி இராமநாதபுரத்தை யரசாளத்தொடங்கினுன். அவன் சரியான வாரிசுதாரனல்லவென்றும் அக்கிரமமாய் இராமநாதபுரத்தைக் கைக்கொண்டானென்றும் எண்ணி ஜனங்கள் அவனுக்குக் கீழ்ப்படியாமலும் வரிசெலுத்தாமலும் கலகம் செய்யத்தொடங்கினுர்கள். பழைய இரங்கநாதத்தேவனுடைய மருமக்களான இரகுநாதத்தேவனும், நாராயணத்தேவனும் கலகத்தலேவர்களாயமர்ந்தார்கள். தம்பி அவர்களே அடக்க முடியாமல்

மதுரைக்கு ஓடிவந்து மறுபடியும் ஒரு பெரிய சேனை யனுப்பும்படி அரசனை வேண்டிக்கொண்டான்.

இந்த நிலைமையில் இராமேசுவரம் போகும்பாதை யெல்லாம் கள்ளர்கள் பயம் அதிகமாய்விட்டது. வட தேசத்தினின்றும் வந்த அநேக பைராகிகள் திருமலை நாயக்கரை வந்து வணங்கி வேண்டிக்கொண்டதன்மேல், அரசன் தம்பியின் அரசாளும் தன்மையில்லாமையை யறிந்து சிறையிலிருந்த பழைய இரங்கநாதத்தேவனையே சேதுபதியாய் நியமித்தனுப்பினர். அத்துடன் தம்பி யைக் கலகஞ்செய்யாமலிருக்கும்படி உத்திரவுஞ் செய்தார். இவ்வாறு ஐந்தாறு வருடங்கள் சென்றன. 1645-ம் வருடம் தம்பி கெட்ட எண்ணத்தோடு இரங்கநாதத் தேவனைக் கொலை செய்துவிட்டு மறுபடியும் சிம்மாசனம் ஏற எண்ணினன். ஆனல் தம்பியால் அவ்வாறு செய்ய முடியவில்லை. மறுபடியும் கலகம் உண்டாயிற்று. 1646-ம் வருடம் திருமலைநாயக்கர், இராமநாதபுரத்தை மூன்று பாகமாகப் பிரித்து இராமநாதபுரத்தை இரங்கநாதத் தேவனுக்கும், சிவகெங்கையைத் தம்பிக்கும், திருவா டானையைத் தணக்கத்தேவன், நாராயணத்தேவன் என்ற இரு சகோதரருக்கும் அளித்தார். சண்டையில்லா மல் எல்லோரும் ஒற்றுமையாயிருந்தனர்.

தம்பியின் உதவியால் இரங்கநாதன், மன்னுர்கோவில், பட்டுக்கோட்டை, தேவகோட்டை, அரந்தாங்கி, திருவாரூர் என்னும் நாடுகளை இராமநாதபுரத்துடன் சேர்த்துக் கொண்டான். தணக்கத்தேவனும் தம்பியும் கொஞ்ச நாளில் இறந்துபோனுர்கள். அவர் இறக்கவே அவர்க ளுடைய நாடுகளும் இரங்கநாதத்தேவனுக்கே சேர்ந்து விட்டன.

விஜயநகர ஆதிபத்தியம்

இந்தச் சமயத்தில் விஜயநகர ராஜ்யமானது வரவர க்ஷீணதசையடைந்துவந்தது. இதுவரையில் மதுரை, தஞ்சை, ஜிஞ்ஜி, மைசூர் மாகாணங்களை ஆண்டு வந்தவர்கள் விஜயநகர சாம்ராஜ்யத்தை அங்கீகரித்துக் கப்பமும் செலுத்தி வந்தார்கள். திருமலைநாயக்கர் பட்டத்திற்கு வந்ததும் விஜயநகர சாம்ராஜ்யத்தைத் தான் ஒப்புக்கொள்ளாமல் மறுத்துக் கப்பஞ்செலுத்தாமலும், கீழ்ப் படியாமலும், சுவாதீனம் பாராட்டத்தொடங்கினர். இதனால் பெரும்போர் விளையுமென்று எண்ணியே, தஞ்சைத்தலைவன் ஜிஞ்ஜித்தலைவனுடன் நட்புப்பாராட்டி வந்தான். 1638-ம் வருடம் விஜயநகர ராஜ்யத்தலைநகரான சந்திரகிரியில் இரங்கராஜன் பட்டத்திற்கு வந்தான். இவன் வீரமும் தீரமும் வாய்ந்தவன். திருமலைநாயக்கரின் கர்வத்தையடக்க எண்ணிப்பெருத்த சேனையுடன் தெற்கே படையெடுத்துவந்தான்.

வந்தவன் முதன்முதலில் தஞ்சை ராஜ்யத்தைத் தாக்கினன். தஞ்சாவூரரசன் பயந்து சரணமடைந்தான். இரங்கராஜன் பின் ஜிஞ்ஜிக்கோட்டையை முற்றுகை போட்டான். இச்சமயத்தில் திருமலைநாயக்கர் கொஞ்சமேனும் தேசாபிமானமும் ஜாதியபிமானமுமில்லாமல், கோல்கொண்டாவை அரசாண்டுவந்த முஸ்லீம்கள் தலைவனை யுதவிகேட்க, அவன் வடக்கேயிருந்து இரங்கராஜன் தலைநகராகிய சந்திரகிரியின் மீது படையெடுத்து வந்தான். இரங்கராஜன் இருபுறமும் தாக்கப்பட்டதால், ஜிஞ்ஜி கோட்டையை முற்றுகையிட்டதை விட்டுவிட்டு வடக்கே தன் தலைநகரை நோக்கிச் செல்ல நேர்ந்தது.

இரங்கராஜன் கோல்கொண்டா சுல்தானேடு கடுமையான யுத்தம் புரிந்தான். யுத்தத்தில் இரங்கராஜன் தோல்வி

யடைந்தான். உடனே தன்னுடைய சிற்றரசர்களின் உதவியை நாடினுன். மைசூர் அரசன் மட்டும் உதவி புரிந்தான். மற்றவர் உதவிக்கு வரவில்லை. அதனுல் இரங்கராஜன் தோல்வி யடைந்ததோடு தன் நாடு துறந்து மைசூருக்கு ஓடிப் போய்விட்டான்.

விஜய நகர ராஜ்யத்தை ஜெயித்த கோல்கொண்டா சுல்தான் அத்தோடு நில்லாமல் தெற்கேயுள்ள எல்லாச் சிற்றரசர்களையும் வென்று தன்னுடைய அரசின் கீழ்ப் படுத்த எண்ணினுன். 1644-ம் வருடம் தெற்கே நோக்கிப் படையெடுத்து வந்து ஜிஞ்ஜிக் கோட்டையை முற்றுகை போட்டான். அப்பொழுது திருமலைநாயக்கர் பீஜப்பூர் சுல்தான் உதவியைக் கோரினுர். பீஜப்பூர் சுல்தானும், கோல்கொண்டா சுல்தானும் ஒன்று சேர்ந்து விட்டார்கள்.

இரண்டு சுல்தான்களும் ஒன்று சேர்ந்தது திருமலை நாயக்கருக்குக் கஷ்டமாய் முடிந்தது. ஜிஞ்ஜிக்கோட்டைக்குள்ளிருந்த நாயக்கருடைய சேனைக்குள்ளேயே சச்சரவு ஏற்பட்டது. ஜிஞ்ஜிக் கோட்டையானது சிரமமில்லாமலேயே முஸ்லீம்களுடைய கைவசப்பட்டது. திருமலை நாயக்கர் மனமுடைந்து மதுரை வந்து சேர்ந்தார். தேசாபிமானமும் ஜாதியபிமானமுமில்லாது தன்னலமே பாராட்டும் தேசத் துரோகிகளின் கதி இதுவேயாகும். இத்துடன் ஒழியவில்லை. முஸ்லீம்கள் மதுரை மீதும் படையெடுத்து வந்தார்கள். மதுரை ராஜ்யம் முழுவதும் முஸ்லீம்கள் படைகளால் பாழாக்கப் பட்டது. திருமலைநாயக்கர் சண்டை செய்ய முடியவில்லை. ஆனுல் சண்டை செய்யாமலே தஞ்ச மடைந்தார். பீஜப்பூர் சுல்தானுக்கு அடங்கி நடப்பதோடும், வருடந்தோறும் கப்பங்கட்டுவதாகவும் ஒப்புக் கொண்டார். "வீடு இரண்டு பட்டால் கூத்தாடிக்கு எளிது" என்ற பழமொழிப்படி முஸ்லீம்கள் ஆதிபத்யம் தென்னிந்தியாவில் நாட்டப்பட்டது.

கொஞ்ச காலத்திற்கெல்லாம் மைசூர்ச்சேனை மதுரை மீது படையெடுத்து வந்தது. இக்காலத்தில் திருமலை நாயக்கர் சேதுபதியின் உதவியைக் கோரினர். சேதுபதி



திருமலை நாயக்கர் மகால்

யும் உதவி செய்தான். சேதுபதியும் திருமலை நாயக்கரும் சேர்ந்து மைசூர்ச் சேனையை முறியடித்துத் துரத்தினர்

கள். திருமலைநாயக்கரின் தம்பியான குமாரமுத்து பெருத்த சேனையுடன் மைசூர்ச் சேனையைத் துரத்திச் சென்று மைசூர்மீது படையெடுத்து, வெற்றி பெற்று அவ் வூரரசனையும் சிறைப் பிடித்து வந்து சேர்ந்தான். வெற்றிக் கோலத்துடன் குமாரமுத்து திரும்பிவரும் முன்னமேயே திருமலைநாயக்கர் 1659-ம் வருடம் காலஞ் சென்றார்.

திருமலை நாயக்கர் காலத்தில் மதுரை ராஜ்யத்தில் தற் கால மதுரை ஜில்லா, இராமநாதபுரம் ஜில்லா, சிவ கங்கை ஜமீன், திருநெல்வேலி ஜில்லா, சேலம் ஜில்லா, கோயம்புத்தூர் ஜில்லா, திருச்சிராப்பள்ளி ஜில்லா, புதுக் கோட்டை சமஸ்தானம், திருவாங்கூர் ராஜ்யத்தின் ஒரு பாகம் இவ்வளவும் அடங்கியிருந்தன.

திருமலைநாயக்கர் கட்டிய முக்கிய கட்டிடங்கள்.

(1) **திருமலை நாயக்கர் மகால்:** இதில் தற்போது, மதுரை இராமநாதபுரம் ஜில்லா கோர்ட்டுகளும், முன்சீப் கோர்ட்டுகளும் இருக்கின்றன. இதன் உன்னதமான சிக ரங்கள் பார்வைக்கு அழகாயிருக்கும்.

(2) **பெரிய தெப்பக்குளம்** அல்லது மாரியம்மன் தெப்பக்குளம் அல்லது வண்டியூர்த் தெப்பக்குளம் என் னும் அழகிய குளம் மாரியம்மன் கோவிலுக்குப் பக்கத்தி லிருப்பதால் மாரியம்மன் தெப்பக்குளம் என்றும், வண்டியூர் என்ற கிராமத்திற்குப் பக்கத்திலிருப்பதால் வண்டியூர்த் தெப்பக்குள மென்றும் சொல்லப்படுகிறது.

(3) **புதுமண்டபம்** என்ற கருங்கல் கட்டிடம் சிற்பத் திற் சிறந்த அழகிய மண்டபம். இது மீனாட்சியம்மன் கோவிலின் கிழக்குக் கோபுரத்திற்கு எதிரே இருக்கிறது. இம் மண்டபத்தைச் சுற்றிலுமுள்ள சிறிய அகழிபோன்ற பள்ளத்தில் ஜலத்தைச் சேர்த்து அநேக புஷ்பங்களைப் போட்டு, மார்கழி மாதமும் வைகாசி மாதமும் மீனாட்சியம் மனுக்கு நடக்கும் உத்சவங்களை நடத்தி வந்தார்கள். தற்

போது சௌகரியத்தை யுத்தேசித்து அகழியில் ஜலம் தேக்குவதை விடுத்து உத்சவாதிகளை மட்டும் முறையே நடத்தி வருகிறார்கள்.



புதுமண்டபத்தின் முன்புறம்

(4) **இராயர் கோபுரம்:** இது புதுமண்டபத்தின் கிழக்கேயிருக்கும் முற்றும் முடிவடையாத கோபுரம். இதைப் போல் முடிவடையாத கோபுரம் ஸ்ரீரங்கத்தில் ஒன்றிருக்கிறது. இராயர் கோபுரத்தைப் பற்றி ஒரு கதை சொல்வதுண்டு. அதாவது ஆரம்பித்த கட்டிடத்தில் கட்டப்பட்ட பெரிய தூண்போல் நிறுத்தப்பட்டிருக்கும் கல்லில் தேரையிருக்கிறபடியால் மேலே கட்டக்கூடாதென்று கல்தச்சர்கள் சொன்னதைக்கேட்டு நிறுத்திவிட்டதாகச் சொல்லுகிறார்கள். மதுரையில் கட்டப்பட்டதில் தான் தேரை யிருக்கிறதென்றால், ஸ்ரீரங்கத்தில் கட்டப்பட்ட கோபுரத்திலுமா தேரை யிருக்கிறது? இக்கதை நம்பத்தகுந்ததல்ல. எக்காரணத்தாலோ இக்கோபுரம் முடியாமல்போயிற்று.

(5) தற்போது மதுரை ஜில்லா கலெக்டர் வசிக்கும் தமுக்கம்பங்களாவும் இவராலேயே கட்டப்பட்டது.



கிளிகட்டி மண்டபமும் மீனாட்சி கோவிலிலிருந்து சுந்தரேசுவரர் கோவிலுக்குப் போகும் பாதையும். இதில்தான் பெரிய தெப்பக்குளத்திலிருந்து எடுக்கப்பட்ட விநாயகருடைய விக்கிரகம் வைக்கப்பட்டிருக்கிறது.

இவைகள் தவிர ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ ஆண்டாள் கோவிலில் சில பாகமும் திருநெல்வேலி நெல்லையப்பர் கோவிலில் சில பாகமும் இவராலே கட்டப்பட்டதென்று எண்ண இடமிருக்கிறது.

8. முத்து அழகாத்திரி

(1659—1662)

திருமலை நாயக்கர் 1659-ம் வருடம் இறந்ததும் அவர் மகன் முத்து அழகாத்திரி பட்டத்திற்கு வந்தான். திருமலை நாயக்கரின் தம்பியாகிய குமாரமுத்து மைசூரி லிருந்து திரும்பி வந்தான். அவன் தான் பட்டத்திற்கு வரவேண்டுமென்று கலகம் செய்யாமல் சிவகாசியின் பிரதி நிதியாயமர்ந்தான்.

முத்து அழகாத்திரி முஸ்லீம்களை அடக்க எண்ணித் தஞ்சாவூர் மன்னனுடன் உடன்படிக்கை யொன்று செய்து கொண்டான். இதையறிந்த முஸ்லீம்கள் மறுபடியும் படை யெடுத்து வந்து தஞ்சாவூரையும், வல்லத்தையும், பிடித்துக் கொண்டு பாதையிலுள்ள கிராமங்களையும் பயிர் பச்சை களையும் பாழாக்கிக்கொண்டே, திருச்சிராப்பள்ளி, மதுரை இவைகளின்மீது படையெடுத்து வந்தார்கள்.

முஸ்லீம்களை எதிர்த்துப் போர் செய்யாமலும், அவர் களை யடக்க வேறு முயற்சி ஒன்றும் செய்யாமலும், அழ காத்திரி, கோட்டைக்குள் போய் ஒளிந்துகொண்டான். அக்காலத்தில் தென்னிந்தியாவில் பெரும் பஞ்சகாலமா யிருந்தது. அத்துடன்கூடக் கொள்ளை நோய்கள் பலவு மிருந்தன. அப் பஞ்சத்தாலும் நோயாலும் முஸ்லீம் களுடைய சேனையின் பெரும்பாகம் இறக்கவே, முஸ் லீம்கள் தலைவன் பயந்து வந்தவழியே எஞ்சிய சேனை யுடன் திரும்பிவிட்டான்.

அதன் பிறகு கொஞ்சகாலம் அரசாண்டுவிட்டு 1662-ம் வருடம் முத்து அழகாத்திரி காலஞ்சென்றான்.

9. சொக்கநாத நாயக்கன்
(1662—1682)

முத்து அழகாத்திரி இறந்ததும் அவன் மகன் சொக்க நாத நாயக்கன் பட்டத்திற்கு வந்தான். அப்பொழுது சொக்கநாதன் சிறு பையனுகவிருந்தான். அதனுல் ராஜ்ய காரியங்களெல்லாம் முக்கிய பிரதானிகளாலும், மந்திரி களாலுமே நடத்தப்பட்டு வந்தன. அவர்களுடைய துர்ப் போதனையால் சொக்கநாதன், மதுரைத் தலைநகரைவிட்டுத் திருச்சிராப்பள்ளியைத் தலைநகராக மாற்றினுன்.

சொக்கநாத நாயக்கனுடைய பேராசை

முஸ்லீம்களைத் தமிழ் நாட்டினின்றும் துரத்தியடித்து விட்டு விஜயநகர சமஸ்தானத்தை மீட்க வேண்டுமென் பதும் ஜிஞ்ஜிக் கோட்டையைத் தன் கைவசப் படுத்திக் கொள்ள வேண்டுமென்பதும் அவனுடைய ஆசை. உடனே அவன் ஜிஞ்ஜிக்கோட்டையைப் பிடிக்கும்பொருட் டுத் தளவாய் லிங்கமநாயக்கனிடம் 40,000 காலாட் படைகளை யனுப்பி வெற்றி பெற்றுவரும்படி சொன்னுன். படைகளுடன் சென்ற லிங்கமநாயக்கன் பகைவரிடம் லஞ்சம்பெற்றுத் தான் கைக்கொண்ட காரியத்தை நிறை வேற்ருது கெடுத்துவிட்டான்.

சதியாலோசனை

லிங்கமநாயக்கன் செய்த துரோகம் தவிர அரண்மனை யில் பிரதானிகளும், மந்திரிகளும் மற்றுமுள்ள ராணுவ உத்தியோகஸ்தர்களும் சதியாலோசனை செய்து சொக்க நாத நாயக்கனுக்குத் துரோகம் செய்யத் துணிந்தார்கள். அரசனுடைய ஆணைக்கு விரோதமாய் அவர்கள் குடிகளை வருத்தத் தொடங்கினுர்கள். சொக்கநாத நாயக்கன் சிறு

யைபனுகை இருந்தபடியால் அவனை அரண்மனையினின்றும் வெளியேறுதபடி கைதியைப்போல் காத்துவந்தார்கள். தங்களுடைய எண்ணத்திற்கு விரோதமாக இடப்படும் அரசனுடைய உத்திரவுகளை அரண்மனையைவிட்டு வெளி யேற்றுவதேயில்லை.

சொக்கநாதன் அவர்களை எவ்வளவோ நயத்துடனும் பயத்துடனும் சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. கடைசியாய் அவர்களை அரசன் நேரே விரோதித்துக்கொள்ளும் படி நேரிட்டது. உடனே அந்தத் துரோகிகள் லிங்கம நாயக்கனுடன் சேர்ந்துகொண்டார்கள். இந்த விஷயம் அந்தப்புரமூலமாய் அரசன் காதுக்கெட்டியது. உடனே அரசன் துணிந்து வேலைசெய்ய ஆரம்பித்தான். துரோகிகள் ஏவுதலால் ராஜ்யப் பிரஷ்டர்களாயிருந்த இரண்டு வீரர்களுக்குத் தன் நிலைமையை அறிவித்துச் சில வீரர்களுடன் இரகசியமாய் அரண்மனைவந்து துரோகிகளைக் கைதி செய்யும்படி எழுதினன். ராஜ்யப் பிரஷ்டர்களும் அரசனுலிடப்பட்ட ஆணைப்படி அரண்மனைவந்து திடீரெனத் துரோகிகளைக் கைது செய்தார்கள். மந்திரி அந்த இடத்திலேயே உயிரிழந்தான். பிரதானி கண்ணிழந்தான்.

துரோகிகளில் சிலர் இறந்த பிறகு அரசன் லிங்கம நாயக்கனைத் தண்டிக்க எண்ணினன். லிங்கமநாயக்கனே மிகவும் பலசாலி. அவனுக்கு முஸ்லீம்சேனைத்தலைவர்களின் சிநேகம் அதிகம். அதனுல் சொக்கநாத நாயக்கன் தன் கோபத்தை வெளிக்காட்டாது, தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தான். அவனைப் பிடிப்பதற்காக அநேக முயற்சிகள் செய்தும் பயன்படாமற் போயின. இவனது சூழ்ச்சியை யறிந்த லிங்கமநாயக்கன் தப்பியோடி ஜிஞ்ஜிக்கோட்டைத் தலைவனுன சகோசியுடன் சேர்ந்துகொண்டான். சகோசியைத் தூண்டித் திருச்சிராப்பள்ளியை முற்றுகைபோடும்படி ஏவினன். சகோசியும் லிங்கமநாயக்கனும் சேர்ந்து

12000 காலாட்படைகளையும் 7000 குதிரைப் படைகளையும் சேர்த்துக்கொண்டுபடையெடுத்து வந்தார்கள். சொக்கநாத னுடைய சேனையோ 50,000 காலாட்களைக்கொண்டது. சொக்கநாத நாயக்கனின் உத்தியோகஸ்தரில் சிலர் மறுபடி யும் அவனை வஞ்சிக்க எண்ணினார்கள். ஆயினும் அரச னோ மனம் பதறாமல், தன்னுடைய உத்தியோகஸ்தரில் ஒருவரையும் நம்பாமல் தானே சகல காரியங்களையும் பார்த்துவந்தான். யுத்தம் வெகு மும்முரமாய் நடந்தது. அதில் சிலர் விசுவாசத்துடன் அரசனுக்கு உதவி புரிந்தனர். கடைசியாக லிங்கமனும் சகோசியும் தோல்வி யடைந்து தஞ்சைநகருக்கு ஓடிவிட்டார்கள்.

சொக்கநாதன் சிறுவனாயினும் அவன் மனோதைரிய மும், ஆழ்ந்த ஆலோசனையும் அவனை அநேக சமயங்களில் காப்பாற்றியிருக்கின்றன. அநேகர் அவன் திறமையைக் கண்டு புகழ்ந்து அவன் சொன்னபடி நடக்கத் தொடங்கி னார்கள். அவன் சுத்தவீரனென்பதும், அஞ்சாநெஞ்சன் என்பதும் எங்கும் பரவிற்று. உடனே அவன் சேனை 70,000 காலாட்களுடன் கூடியதாயிற்று. லிங்கமநாயக்க னையும் சகோசியையும் துரத்திக்கொண்டு சொக்கநாத நாயக்கன் தஞ்சையின்மேல் படையெடுத்துச் சென்றான். இவன் படையெடுத்துவரவும், லிங்கமனும் சகோசியும் ஜிஞ்ஜிக் கோட்டைக்கு ஓடிவிட்டார்கள். தஞ்சாவூர் அரசன் சொக்கநாதனைப் பணிந்து சமாதானஞ் செய்து கொண்டான்.

இவ்வாறு சதாகாலமும் போராயிருந்ததால் குடிகளால் நிம்மதியாய் வசிக்கமுடியவில்லை. ஊரெங்கும் பஞ்சமும், கொள்ளையும், கொள்ளைநோய்களும் அதிகமாயின. கடை சியாகச் சிலகாலம் போரில்லாமலிருந்ததால் ஜனங்கள் ஒரு வாறு பயம் நீங்கித் தத்தம் இருப்பிடம் வந்து தங்களது தொழில்களைச் செய்யத்தொடங்கினார்கள்.

வனமியான்

இவ்வாறு குடிகள் சுகமாக வாழ்ந்து வரும் நாளில் மறுபடியும் கஷ்டகாலம் திரும்பி அவர்களை வதைக்கத் தொடங்கிற்று. 1663-ம் வருடம் பீஜப்பூர் சுல்தான் **இதல் கானின்** சேனாதிபதியான **வனமியான்** என்பவன் சேனைகளுடன் திடீரென்று தோன்றித் திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டான். தஞ்சாவூர் அரசனும் வனமியானுக்கு உதவி செய்தான். சொக்கநாதநாயக்கனைத் தஞ்சமடைந்து விடும்படியாகச் சொல்லியனுப்பினார்கள். அரசன் தஞ்சமடைய மறுத்ததோடு யுத்தமும் மும்முரமாய்ச் செய்தான். கடைசியாக முஸ்லீம்கள் தலைவன் தோற்றுப் போய்விட்டான்.

தோற்றுப்போன கோபத்தால் முஸ்லீம்கள் தலைவன் திரும்பிப்போகும் பாதையிலுள்ள கிராமங்களை நெருப்புக் கிரையாக்கியும், கொள்ளையடித்தும், ஜனங்களைக் கொலை செய்தும், ஸ்திரீகளை மானபங்கம் செய்தும் இன்னும் பலவிதமான தொந்திரவுகள் செய்துகொண்டும் தன் தேசம் போய்ச் சேர்ந்தான்.

முஸ்லீம்கள் சேனை தொலைந்ததும், தஞ்சாவூர் அரசன் தனக்குதவிபுரியாது முஸ்லீம்களுக்கு உதவி செய்ததற்காக அவனைத் தண்டிக்க எண்ணிச் சேனையுடன் சொக்கநாத நாயக்கன் தஞ்சைமீது படையெடுத்துச் சென்றான். சென்றவன் வல்லம் கோட்டையை முதல்முதலில் கைப்பற்றினான். இதையறிந்த தஞ்சை யரசன் சொக்கநாதனுடன் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டான்.

சேதுபதி

முஸ்லீம்களுக்கு விரோதமாய்த் தனக்கு உதவி புரியாமல் துரோகஞ் செய்த குற்றத்திற்காகச் சேது

பதியைத் தண்டிக்கும் பொருட்டுச் சொக்கநாத நாயக்கன் படையெடுத்துச் சென்று **திருப்பத்தூர், புதுக்கோட்டை, மாறுமதுரை, காளையார் கோவில்** முதலான கோட்டைகளைப் பிடித்துக் கொண்டான். சேதுபதியோ சொக்கநாத நாயக்கனோடு எதிர்த்து யுத்தஞ் செய்யாமல் காட்டில் போய் ஒளிந்து கொண்டான். சொக்கநாத நாயக்கனுக்குச் சேதுபதியைத் தேடிக் கண்டுபிடிக்க நேரமில்லாமல் அவசர காரியமாய்த் தன் தலைநகருக்கு வர நேர்ந்தது. சமயம் பார்த்திருந்த சேதுபதி, தன் மறவர் சேனையுடன் சொக்கநாத நாயக்கனுடைய சேனையைத் தாக்கி வதைத்தான். இந்தச் சமாசாரத்தைக் கேள்விப்பட்ட அரசன் எஞ்சிய தனது சேனையைத் தலைநகருக்குத் திரும்பி வரும்படி உத்தரவிட்டான். இதனால் சேதுபதியின் கர்வத்தைச் சொக்கநாதநாயக்கனால் அடக்க முடியாமற் போயிற்று.

சொக்கநாத நாயக்கன், தன் பாட்டனாகிய திருமலை நாயக்கர் கட்டிய மகாலிலிருந்த அழகிய சித்திரப்பதுமைகளை யெல்லாம் பெயர்த்து எடுத்து, தன்னால் திருச்சிராப்பள்ளியில் கட்டப்பட்ட அரண்மனைக்கு எடுத்துச் சென்றான். அதனால் திருமலை நாயக்கர் மகாலின் அழகு குறைய ஆரம்பித்தது.

நிற்க, துரோகியான லிங்கம நாயக்கனுக்கும் சொக்கநாதனுக்கும் எப்படிச் சிநேகிதமாயிற்றோ தெரியவில்லை. 1666-ம் வருடம் லிங்கம நாயக்கன் மகளைச் சொக்கநாதன் மணஞ் செய்து கொண்டதாகச் சொல்லப்படுகிறது. லிங்கம நாயக்கன் மகளும் சொக்கநாதனும் ஒருவரையொருவர் காதலித்து வந்ததால் அவர்களிருவருக்கும் சிநேகிதமேற்பட்டதென்று எண்ண இடமிருக்கிறது. ஒருவேளை இதல்கான் மறுபடியும் படையெடுத்து வரப் போகிறான் என்ற வதந்தியால் ராஜதந்திரத்தை யுத்தேசித்

துச் செய்திருக்கலாம் என்று ஒரு சாரார் சொல்லு கின்றனர்.

தஞ்சை யுத்தம்

1674-ம் வருடம் தஞ்சாவூரை **அச்சுதவிஜயராகவ நாயக்கன்** அரசாண்டுவந்தான். அவனுக்கு அழகிற் சிறந்த மகள் ஒருத்தி இருந்தாள். சொக்கநாதன் அவளைத் தனக்குக் கல்யாணம் செய்து கொடுக்கும்படியாய்த் தூதர் களை யனுப்பிக் கேட்டான். இருவரும் ஒரே நாயக்கர் ஜாதி யினராயிருந்தும் அச்சுதராகவ நாயக்கன், சொக்கநாத நாயக்கனுக்குப் பெண் கொடுக்க மறுத்துவிட்டான். தூது வந்தவர்களையும் அவமானப்படுத்தி யனுப்பிவிட்டான். சொக்கநாதன் தன் தூதுவரைத் தஞ்சையரசன் அவமானப் படுத்தியதை யறிந்ததும் அளவற்ற கோபமடைந்தான். தஞ்சைமேல் உடனே படையெடுத்து அவன் கர்வத்தை யடக்கி அவன் மகளையும் கவர்ந்து வர எண்ணினான். தஞ்சையரசன், சொக்கநாத நாயக்கனைப் பிறப்புச் சுத்த மில்லாதவனென்று எண்ணினதாலேயே பெண் கொடுக்க மறுத்தான்.

கோபங்கொண்ட சொக்கநாதனே பெரிய சேனையுடன் தஞ்சை மீது படையெடுத்துச் சென்றான். தஞ்சையரசன் சேனையை, வழியிலேயே சந்தித்து முறிய அடித்துத் துரத் திக்கொண்டே சென்று தஞ்சை நகரையும் முற்றுகை யிட்டான். சொக்கநாதன் மறுபடியும் தூதுவர் மூலம் தஞ்சை யரசனுக்கு உடனே அவன் மகளைக் கல்யாணஞ் செய்து கொடுத்தால் முற்றுகையை நிறுத்திவிடுவதாகச் சொல்லியனுப்பினான். தஞ்சையரசனே வந்த தூதுவரை யவமானப்படுத்தியதோடு சொக்கநாதனையும் இழித்துப் பேசியனுப்பிவிட்டு வீராவேசத்துடன் யுத்த சன்னத்தனாய்ப்

போர் முனைக்கு வந்தான். யுத்தம் வெகு மும்முரமாய் நடந்தது.

மதுரைத் தளவாய் வெங்கடகிருஷ்ணப்பன், கோட்டையைப் பீரங்கிகளால் தகர்க்கத் தொடங்கினன். கோட்டை மதிலைச்சுற்றிலுமுள்ள அகழ்களெல்லாம் பிணங்களால் நிறைந்தன. மதுரைச் சேனை, கோட்டைக்குள் நுழைந்து திடீரென்று அரண்மனையைச் சூழ்ந்து கொண்டன. உடனே அரண்மனை தீப்பற்றி எரிய ஆரம்பித்தது. சொக்கநாத நாயக்கன் எந்தப் பெண்ணுக்காக இந்த யுத்தஞ்செய்ய நேரிட்டதோ அந்தப் பெண் அரண்மனையின் அந்தப்புரத்திலுள்ள மற்ற ஸ்திரீகளுடன் தீயில் மாண்டாள். தஞ்சையரசன் வயது முதிர்ந்தவனு யிருந்த போதிலும் வீராவேசத்துடன் யுத்தம் புரிந்து போர்க்களத்திலேயே மாண்டான். தான் நினைத்துச்சென்ற பெண் மாண்டதால் சொக்கநாதன் மனமுடைந்து தஞ்சையைக் காக்கும்படி ஒரு சேனையை நிறுத்திவிட்டுத் திருச்சிராப்பள்ளி வந்து சேர்ந்தான். தன்னுடைய வளர்ப்புச் சகோதரனை அழகிரி நாயக்கனிடம் தஞ்சையை ஒப்புவித்தான்.

யுத்தத்தில் மும்முரமாய்ச் சண்டைசெய்த தளவாய் வெங்கடகிருஷ்ணப்பன், பிரதானி சின்னத்தம்பி முதலி, திண்டுக்கல் கோட்டைத் தலைவன் இரங்கண்ண நாயக்கன் மகன் சின்னக்காத்திரன் முதலானவர்கள் உயர்ந்த பட்டங்களும் பரிசுகளும் பெற்றனர்கள்.

தான் கோரிய மங்கை தீயிலிறந்தபிறகு, சந்திரகிரியரசன் மகளான மங்கம்மாளை விவாகம் செய்து கொண்டான். மங்கம்மாள் யுக்தி புத்தி மனோ தைரியங்களில் சிறந்தவள். கணவனிடம் விசுவாசமாயும் அன்பாயுமிருந்து திருப்தியாய் நடந்துவந்தாள்.

LIBRARY No. 108242 MADRAS

செங்கமல நாயக்கன்

தஞ்சை யுத்தத்தில், தஞ்சையரசனை விஜயராகவ நாயக்கன் மடிந்ததும், அவன் மகன்* **செங்கமல நாயக்கன்** தப்பியோடிப் பீஜப்பூர் சுல்தான் இதல்கானைத் தஞ்சமடைந்தான். சுல்தான், தன்மகாராஷ்டிர சேனைத் தலைவனை **வெங்காஜி** (ஏகோஜி)யை அனுப்பி, தஞ்சையில் சொக்கநாதனால் நியமிக்கப்பட்டிருக்கும் அழகிரி நாயக்கனைத் துரத்தியடித்துவிட்டுச் செங்கமல நாயக்கனிடம் ராஜ்யத்தை ஒப்புவிக்கும்படி சொன்னான்.

தஞ்சைத் தலைவன் யுத்தத்திற்குத் தயாராயிருப்பதையறிந்த வெங்காஜி பக்கத்திலுள்ள காட்டில் ஒளிந்துகொண்டு சமயம் பார்த்திருந்தான். இதன் நடுவில் தஞ்சைத் தலைவனை அழகிரி நாயக்கன் ஸ்வாதீனம் பாராட்ட ஆரம்பித்தான். அதனால் சொக்கநாத நாயக்கனுக்கும் தஞ்சையரசனுக்கும் விரோதமேற்பட்டது.

இந்நிலைமையில் 1676-ம் வருடம் வெங்காஜி திடீரென்று தஞ்சையைத் தாக்கி, கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டான். அத்தோடு நில்லாமல் வெங்காஜி திருச்சிராப்பள்ளிக் கோட்டையையும் முற்றுகையிட்டான். சொக்கநாதன் கோட்டைக்குள் அகப்பட்டுக் கொண்டான். கோட்டை பலமாயிருந்தபடியால் வெங்காஜியால் அதைப் பிடிக்க முடியவில்லை. அவன் திருச்சிக் கோட்டையைப் பிடிப்பதை விட்டு விட்டுப் பக்கங்களிலுள்ள சிறு கோட்டைகளைப் பிடித்துத் தன் வசப்படுத்திக்கொண்டான். கொஞ்ச காலத்திற்குள் திருச்சிராப்பள்ளிக் கோட்டையைத் தவிர மதுரை ராஜ்யத்தின் பெரும்பான்மை வெங்காஜி வசத்தில் வந்து விட்டன. மறுபடியும் நாடெங்கும் பஞ்சமும்,

*சிலர் பேரன் என்றும் சொல்லுகிறார்கள்.

கொள்ளைகளும், கொலைகளும் அதிகமாயின. ஜனங்கள் பலவிதத் துன்பங்களுக்குள்ளாயினர்.

இதல்கான் சொற்படி வெங்காஜி தஞ்சையைச் செங்கமல நாயக்கனிடம் ஒப்புவிக்காமல், தானே அரசாளத் தொடங்கினன். வெங்காஜி காலத்தில் தேசமெங்கும் செழிப்புற்றது. விவசாயம் விருத்தியடைந்தது. நாசமடைந்த பாலங்களும், பாதைகளும் குளங்களும் மராமத்துச் செய்யப் பட்டன. ராமன் ஆண்டாலென்ன ராட்சசன் ஆண்டாலென்ன என்ற எண்ணத்துடன், ஜனங்கள் திருப்தியடைந்திருந்தார்கள். அச்சமயத்தில் இதல்கான் வெங்காஜியைத் தண்டிக்கும் பொருட்டுப் படையெடுத்து வருவதாய் ஒரு வதந்தி பரவிற்று. இதைக் கேள்வியுற்ற சொக்கநாதன் ஒரு பெரிய சேனையைத் திரட்டித் தயாராக வைத்திருந்தான். மைசூர் அரசன் மதுரை ராஜ்யத்தின் மீது படையெடுக்கச் சேனைகளைத் திரட்டிக் கொண்டிருந்தான். 1676-ம் வருடம் தேசமெங்கும் பெரும் குழப்பமாகவே யிருந்தது.

நிற்க, 1677-ம் வருடத்தில் மகாராஷ்டிர வீரனை சிவாஜி என்பவன் தட்சிணத்தை நோக்கிப் படையெடுத்து வந்தான். வந்தவன் தட்சிணப் பிரதேசத்தில் உள்ள அநேக கோட்டைகளை யெல்லாம் கைப்பற்றிக் கொண்டே வந்து கடைசியாகத் தஞ்சையை நோக்கி வந்தான். வரும் வழியிலுள்ள ஜிஞ்ஜிக் கோட்டையையும் பிடித்துக் கொண்டான். தன்னுடைய தம்பியும் தஞ்சைத் தலைவனுமான ஏகோஜியைத் தன்னை வந்து பார்க்கும்படி தூதர்கள் மூலம் சொல்லி யனுப்பினுன். சிவாஜி கொள்ளிடத்தின் வட கரையில் தங்கியிருந்தான். வெங்காஜி சிவாஜியைக் காணச் சென்றதும் அவனை உடனே கைதி செய்து விட்டான். வெங்காஜி இரவில் ஆற்று வெள்ளத்திற் குதித்து நீந்தி யோடிவிட்டானும். கொள்ளிடத்தின் தென் பாகங்களைச் சிவாஜி தன் வசப்படுத்திக் கொண்டான். சிவாஜி

தஞ்சைமீது படையெடுத்து வருகையில் வடக்கே முஸ்லீம் சேனை தெற்கு நோக்கி வருவதா யறிந்து அதை யெதிர்க்கத் திரும்பிப்போக நேர்ந்தது. போகும்போது தன் தம்பியாகிய சந்தோஜியிடம் தான் பிடித்த தேசத்தையும் சேனையை யும் ஒப்புவித்து வடக்கே சென்றான்.

சிவாஜி வடக்கே திரும்பியதை யறிந்து ஏகோஜி சந் தோஜியின் சேனையைத் தாக்கிக் கொடிய போர் புரிந்தான். யுத்தத்தில் சந்தோஜி பின் னடைய நேர்ந்தது. ஆயி னும் மனோதைரியத்தை யிழக்காமல், ஒரு தந்திரஞ் செய்தான். தன் சேனை யில் ஒரு பாதியைக் குகை யொன்றில் ஒளித்து வைத்துவிட்டுத் தான் புறங் காட்டி ஓடினான். தஞ்சை வீரர் போர்க் கோலத்துடன் தாறுமாறாய்க் கலைந்து சந் தோஜியைத் துரத்திக் கொண்டு குகையைக் கடந்து சென்றார்கள். குகையில் ஒளித்திருந்த சேனை, தஞ்சைச் சேனை யைப் பின்புறம் தாக்கிற்று. புறங்காட்டி யோடியதாகப் பாவனை செய்த சந்தோஜி திரும்பி முன்புறம் தாக்கினான். இவ்விதமாய்த் தஞ்சைச்சேனை இரண்டு சேனைகளின் நடுவே அகப்பட்டுத் தோல்வியடைய, மிகுந்தவர்கள் சிதறி யோடினார்கள். இவ்வாறு யுக்தியினால் சந்தோஜி வெற்றி யடைந்தான்.

சிவாஜி

இந்த நிலைமையில், சொக்கநாதன் தஞ்சைமீது படையெடுத்து வந்தான். ஆனால் தன் சேனையில் ஒற்றுமையில்லாததால் ஒன்றும் செய்யமுடியாமல் அவமானத்துடன் திருச்சிராப்பள்ளிக்குத் திரும்பி வந்துவிட்டான்.

சொக்கநாதன் சிற்றின்பத்தில் மூழ்கிவிட்டான். இளவரசனான முத்துவீரப்பன் ராஜ்ய காரியத்தை நடத்தி வந்தான். பழைய உத்தியோகஸ்தர்களை யெல்லாம் தள்ளிவிட்டுத் தனக்கு வேண்டியவர்களை நியமிக்க ஆரம்பித்தான். தளவாய் வெங்கடகிருஷ்ணப்பனிடம் மாத்திரம் அவன் அதிகாரம் செல்லவில்லை. தளவாய் உத்தியோகம் தனக்கு வேண்டுமென்ற ஆசைகொண்ட கோவிந்தப்பையன் முத்துவீரப்பனுக்கு யுக்திசொல்ல ஆரம்பித்தான். இந்த நிலைமையில் மைசூர்ச் சேனை 1677-ம் வருடத்தில் மதுரை ராஜ்யத்தின் மீது படையெடுத்து வந்தது.

சொக்கநாதனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்று அவனைச் சிறைப்படுத்தி விட்டு அவன் தம்பி முத்துலிங்க நாயக்கனை அரசனாக்கினார்கள். அவன் கொடிய அரசனாகி விளங்கினான். முத்துலிங்கநாயக்கனுடைய கொடிய ஆட்சியைப் பொறுக்கமுடியாதபடி ஜனங்கள் அவனைத் தள்ளிவிட்டு மறுபடியும் சொக்கநாதனை அரசனாக்கினார்கள். முத்துலிங்கன் ஓடிப்போய் ரஸ்தம்கான் என்னும் முஸ்லீம் வீரனுடன் சேர்ந்துகொண்டு இருவருமாகத் திருச்சிராப்பள்ளியை முற்றுகைபோட்டு வசப்படுத்திக் கொண்டார்கள்.

ரஸ்தம்கான், தனக்குதவிசெய்த முத்துலிங்கநாயக்கனை முதல் முதலில் சிறைசெய்து தானே தலைவனானான். தலைவனான ரஸ்தம்கானுடைய கொடுமையை ஜனங்கள் பொறுக்க முடியாமல் தவித்தார்கள். இவ்வாறு இரண்டு வருடங்கள் சென்றன.

1680-ம் வருடம் மைசூர்ச் சேனைத்தலைவன் குமாரை

யன் திருச்சிராப்பள்ளியை முற்றுகை போட்டான். கோட்டைக்குள் ரஸ்தம்கான் அகப்பட்டுக் கொண்டான். உடனே சொக்கநாதநாயக்கன், ரஸ்தம்கான் அவனுடைய ஆட்கள் முதலானேரைத் தாக்கி நாசஞ்செய்து விட்டான்.

1682-ம் வருடம் சொக்கநாத நாயக்கனது நிலைமை மிகக் கேவலமாய்விட்டது. மைசூர்ச்சேனை அச்சமயம் திருச்சிக் கோட்டையைச் சூழ்ந்து கொண்டிருந்தது. சொக்கநாதனுக்கு உதவி புரிய வந்த மறவர்கள் கொள்ளை யடிக்கவும் துரோகஞ்செய்யவும் ஆரம்பித்துவிட்டார்கள். சாம்பாஜியின் தலைவனுன அரசுமலை யொருபுறம், ஏகோஜி ஒருபுறம் சமயம் பார்த்துத் தாக்குவதற்காகக் காத்திருந் தார்கள். இந்த நிலைமையில் குமாரையனுக்கும் ஜிஞ்ஜித் தலைவனுன அரசுமலைக்கும் கொடுமையான போர் நேர்ந் தது. அதில் குமாரையன் சிறைசெய்யப் பட்டான். மைசூர்ச்சேனை ஓடத்தலைப்பட்டது. கோட்டைகளெல்லாம் அரசுமலை வசப்பட்டன.

இதுவரை அரசுமலை தன் நண்பன் என்றும், தன் ராஜ்யத்தைக் காத்துத் தன்வசம் ஒப்புவிக்க வந்தவ னென்றும் சொக்கநாதநாயக்கன் எண்ணி யிருந்தான் பாவம்! சொக்கநாதன் கதி மிகவும் கேவலமாயிற்று. நாடு களை இழந்தான். சேனைகளெல்லாம் கைவிட்டோடின. செல்வமும் செல்வாக்கும் தொலைந்தன. கைகொடுத்துதவக் கூடிய நண்பர் எவருமில்லை. பலவிதத்திலும் கேவலமா யிற்று. சாம்பாஜி மறுபடியும் திருச்சிராப்பள்ளியை முற்றுகையிட்டான். இந்த நிலைமையில் சொக்கநாத நாயக்கன் மனமுடைந்தவனுய் 1682-ம் வருடம் மரண மடைந்தான்.

10. ரங்ககிருஷ்ண முத்துவீரப்பன்

(1682—1688)

1682-ம் வருடம் சொக்கநாத நாயக்கன் இறந்ததும் அவன் மகன் ரங்ககிருஷ்ணமுத்துவீரப்ப நாயக்கன் பட்டத்திற்கு வந்தான். அவன் பட்டத்திற்கு வரும்பொழுது வயது 15-ஆயிற்று. நாலைந்து வருடத்திற் கெல்லாம் ராஜ்யம் கொஞ்சங் கொஞ்சமாய் நன்னிலைமைக்கு வந்து கொண்டிருந்தது.

கிழவன் சேதுபதி

இந்த நிலைமையில் இராமநாதபுரம் சமஸ்தானச் சரித்திரம் கொஞ்சம் அறியவேண்டியது அவசியமாகின்றது. திருமலைநாயக்கரிடம் விசுவாசமாயிருந்த சேதுபதி 36-வருடகாலம் நாட்டையாண்டு இறந்து போனான். அவனுக்குப் பிறகு அவன் தம்பி மகன் **ராஜசூரியன்** பட்டத்திற்கு வந்தான். மதுரைத் தளவாய் வெங்கடகிருஷ்ணப்பனுக்கும் ராஜசூரியனுக்கும் கொஞ்சம் விரோதமேற்பட்டது. வெங்கடகிருஷ்ணப்பன் ராஜசூரியனைத் தந்திரமாய்ப் பிடித்துத் திருச்சிராப்பள்ளிக் கோட்டைச் சிறையிலடைத்து விட்டான். பட்டத்திற்கு வந்த ஆறுமாதத்திற் கெல்லாம் ராஜசூரியன் சிறையிலேயே கொலை செய்யப் பட்டான்.

ராஜசூரியனுக்குப் பிறகு அவனுடைய போகஸ்திரி புத்திரனான **ரகுநாதன்** பட்டத்திற்கு வந்தான். இவனுக்குக் **கிழவன் சேதுபதி** என்ற பட்டப்பெயரும் உண்டு. இவன் 36-வருடகாலம் அரசாண்டான். பட்டத்திற்கு வந்தவுடன் தான் பட்டம்பெற வுதவியாயிருந்த இருவரைக் கொன்று விட்டான். தன் அதிகாரத்திற்குட்பட்ட ஒரு

மறவன் மகள் **காத்தாள்** என்பவளை மணஞ்செய்து கொண்டான்.

புதுக்கோட்டை ராஜ்யம்

புதுக்கோட்டை ராஜ்யத்தின் முதல் தலைவன் **சந்திரப் பன்சேர்வை.** அவனுக்குப் பிறகு பட்டத்திற்கு வந்தவன் **பல்லவராயன் தொண்டமான்.** இவன் தன் நாட்டை இராமநாதபுர அதிகாரத்தினின்றும் பிரித்துத் தஞ்சா வூருடன் சேர்க்க நினைத்ததாக அறிந்த கிழவன் சேதுபதி அவனைத் தொலைத்துவிட்டுத் தன் மைத்துனனுன **ரகுநாத னைத்** தொண்டமான் ஆக்கினுன்.

சொக்கநாதநாயக்கன் திருச்சிக்கோட்டையில் ரஸ்தம் கான் கொடுமைக்குட்பட்டுத் தவிக்கையில், கிழவன் சேது பதி அவனை ரஸ்தம்கான் கையிலிருந்து விடுவித்துப் **பர ராஜகேசரி,** என்ற பட்டப்பெயரும் பெற்ருன். இவன் செய்த உதவிக்காக, **குமாரப்பிள்ளை** என்பவனை இராம நாதபுரம் தளவாயாகச் சொக்கநாதன் அனுப்பினுன்.

முத்துவீரப்பன் மிக்க சாமர்த்தியமும் சுறுசுறுப்புமுள் ளவன். எல்லா விஷயங்களையும் தானே கவனித்துவந் தான். ஒவ்வொரு ஸ்தலத்தையும் பார்வையிடத் தானே தனியாய் உதவியில்லாமல் செல்வான். இவன் காலத்தில் பிறநாட்டரசர்கள் நண்பர்களாகவே யிருந்துவந்தார்கள்.

மொகல் சக்கரவர்த்தியின் செருப்பு

மொகலாயச் சக்கரவர்த்தி தன் செருப்பை யானையின் அம்பாரிமீது ஏற்றிச் சேனைகளுடன் தனக்குட்பட்ட சிற்ற ரசர் நாடுகளுக்கு அனுப்புவதுண்டு. தன் நகர் வந்ததும் சிற்றரசன் அதை எதிர்கொண்டழைத்து வந்து, அரண் மனையில் தன் சிம்மாசனத்தில் செருப்பை வைத்து, உபசா

ரங்கள் பல செய்து காணிக்கையுடனும் கப்பத்துடனும் அனுப்பவேண்டுமாம். அதேமாதிரி முத்துவீரப்பன் காலத்திலும் திருச்சிராப்பள்ளிக்குச் செருப்பு ராணுவக்கோலத்துடன் வந்து சேர்ந்தது. முத்துவீரப்பன் எதிர்கொண்டழைக்காமல் தன் தூதுவரை யனுப்பித் தான் அசௌக்கியமா யிருப்பதால், செருப்பை மாத்திரம் உள்ளே அனுப்பும்படிக்கு வேண்டிக் கொண்டான். மொகலாயத்தலைவன் சேனைகளை வெளியே நிறுத்திக்கொண்டு விட்டுச் சில முக்கியத் தலைவர்களுடன் செருப்பை அரண்மனைக்குள் அனுப்பினான். முத்துவீரப்பன் எதிர்கொண்டழைத்து மரியாதையொன்றும் செய்யாமல் சிம்மாசனத்தில் அமர்ந்தவாறே கம்பீரமாயிருந்தான். வந்தவர்கள் கோபாவேசத்துடன் அருகில்வந்து செருப்பைச் சிம்மாசனத்தின்மீது எறிந்தார்கள். முத்துவீரப்பன் சிரித்துக்கொண்டே செருப்பைக் காலில் மாட்டிக்கொண்டு ''அடே! பயல்களா! இன்னொரு காலுக்குச் செருப்பெங்கே?'' என்று அலட்சியமாய்க் கேட்டான். மொகலாயத் தலைவர்கள் அரசனை நிந்தித்துப் பேசினார்கள்.

முத்துவீரப்பன் தன்னுடைய சேனைகளைக்கொண்டு அவர்களைச் சித்திரவதை செய்து அவமானப்படுத்தித் துரத்திவிட்டான். கோட்டைக்கு வெளியே இருந்த சைனியத்தையும் முத்துவீரப்பனுடைய சேனை நாசஞ்செய்தது.

1686-ம் வருடம் தளவாய் வெங்கட கிருஷ்ணப்பன் அரசனுக்கு விரோதமாய்க் கலகஞ் செய்யத் தொடங்கினான். கிழவன் சேதுபதி அவனுடன் சேர்ந்துகொண்டான். ஆனால் சொக்கநாத நாயக்கனால் அனுப்பப்பட்ட இராமநாதபுரம் தளவாய் குமாரப்பிள்ளை, முத்துவீரப்பன் மேலுள்ள அன்பினால் அவ்விருவரையும் பிடித்து அரசனிடம் அனுப்பவேண்டிய முயற்சி செய்தான். இந்தச் சங்கதி தெரிந்த கிழவன் சேதுபதி குமாரப்பிள்ளையைப்

பிடித்துக் கழுவிலேற்றிக் கொன்றதோடு அவன் குடும்பத்தையும் பலவாறு இம்சித்தான். பிறகு கிழவன் சேதுபதியும் தளவாய் வெங்கட கிருஷ்ணப்பனும் தஞ்சையினின்றும் துரத்தப்பட்ட செங்கமலநாயக்கனுடன் சேர்ந்துகொண்டு மூவரும் மதுரை மீது படையெடுத்து வந்தார்கள்.

1688-ம் வருடம் முத்துவீரப்பன் அம்மை நோயால் இறந்துபோனன். அப்பொழுது அவனுடைய ஒரே பட்ட மகிஷியான **முத்தம்மாள்** கர்ப்பவதியாயிருந்தாள். முத்துவீரப்பன் இறந்ததும் அவளும் உடன்கட்டை யேறமுயன்ருள். அவள் கர்ப்பவதியாயிருந்தபடியால் உடன்கட்டையேறக்கூடாதென்று, மற்றவர்கள் தடுத்துவிட்டார்கள். கொஞ்சநாள் சென்றபிறகு முத்தம்மாள் ஒரு பிள்ளேக் குழந்தையைப் பெற்ருள். குழந்தை பிறந்த நான்காம் நாள் முத்தம்மாள் பன்னீரைக் குடித்து, அதனல் ஜன்னி பிறந்து உயிர் துறந்தாள்.

11. மங்கம்மாள்

(1689—1704)

1689-ம் வருடம் முத்தம்மாளுக்கு **விஜயரங்கச் சொக்க நாதன்** என்ற மகன் பிறந்தான். மூன்ரும் மாதத்திலேயே அவனுக்குப்பட்டம் கட்டப்பட்டதாயினும், அவனுக்குப் பிரதிநிதியாக அவன் பாட்டியான **மங்கம்மாள்** ராஜ காரியங்களே யெல்லாம் பார்த்து வந்தாள்.

அரசாட்சித் திறமை

மங்கம்மாள் பெண்ணுயிருந்தபோதிலும் புத்தி, மனுே தைரியம், ராஜதந்திரம் முதலான சிறந்த குணங்கள் வாய்ந்தவள். அவள் காலத்தில் ராஜ்யம் எங்கும் செழிப்புற்ருேங்கியது. உள்நாட்டில் கலகம் விளேந்தாவது அயல் நாடுகளிலிருந்து பகைவர் படையெடுத்து வந்தாவது ராஜ்யத்தின்

சீரைக் குலைக்கவில்லை. காசி முதல் இராமேசுவரத்திற்கும், கன்னியாகுமரி முனைக்கும் நல்ல பாதைகளும், சாலைகளும் இவள் காலத்தில் ஏற்பட்டன. இன்னும் மங்கம்மாள் சாலைகள் என்று எங்கும் பிரசித்தி பெற்றிருப்பது யாவரும் கேட்டிருக்கலாம். வழிகளிலும் மற்ற இடங்களிலும் ஆங்காங்குச் சத்திரங்கள், சாவடிகள், கிராமங்கள், குளங்கள், கிணறுகள் முதலியன ஏற்படுத்தப்பட்டன. அந்தணர்க்கும், அறிஞர்க்கும் ஏழைகட்கும், பரதேசிகளுக்கும் விசேஷ தான தர்மங்கள் செய்துவந்தாள்.

1693-ம் வருடம் இராமநாதபுரத்தில் கிழவன் சேதுபதி அரசாண்டுவந்தான். அக்காலத்தில் ஜான்-டி-பிரிட்டோ (John De Britto) என்னும் பாதிரி ராஜவம்சத்தைச் சேர்ந்த **திரயத்தேவனைக்** கிறித்தவ மதத்திற் சேர்த்து விட்டான். அப்புதியமதத்தின் விதிப்படி தன் மனைவிகளில் ஒருத்தியைத் தவிர மற்றவர்களை அவன் தள்ளிவிட்டான். அவர்களுள் ஒருத்தியாகிய **கடலை** என்பவள் கிழவன் சேதுபதியின் மருமகள். இச்செய்தியைக் கேட்ட கிழவன் சேதுபதி கோபாவேசத்துடன் ஜான்-டி-பிரிட்டோவைச் சிறைப்படுத்தி ராஜ்யத்திற்கு அப்பால் கொண்டுபோகச் சொல்லிக் கடைசியாகப் பாம்பளுற்றின் கரையிலுள்ள **உறையூரிற்** சிரச்சேதஞ் செய்வித்தான்.

1697-ம் வருடம் திருவாங்கூர் அரசன் மதுரையரசனுக்குக் கப்பங்கட்டவில்லை. அதோடுகூட கப்பமானது நாலைந்து வருடங்களாகப் பாக்கி நின்றது. மங்கம்மாள் அதை வசூலித்து வருமாறு தன் வடுகர் சைனியத்தையனுப்பினாள். இச்சேனை ஆரவாய் பொழிக்கணவாய் வழியாய் * **கற்குளத்தருகே** வந்து சேர்ந்தது. திரு

---

* **கற்குளம்** அல்லது **பத்மநாபபுரம்** என்ற ஊரானது திருவாங்கூரின் பழைய தலை நகராயிருந்தது. அது தற்போது நல்ல நிலைமையிலிருக்கிறது.

வாங்கூர் அரசன் காரியம் மிஞ்சி விட்டதென்றறிந்து பயந்து, பலத்தால் முடியாத காரியத்தை வஞ்சனையால் முடித்துக்கொள்ள எண்ணி, வடுகர் சேனைத் தலைவருடன் நட்புப்பாராட்டி அவர்களைக் கோட்டைக்குள் அழைத்துச் சென்றான். அப்பொழுது திருவாங்கூர் அரசனுக்கு எட்டு வீட்டுப் பிள்ளைமார் என்ற எட்டுப் பரம்பரை மந்திரிகளில் ஆகாத சில மந்திரிகள் வலுத்தவர்களாயிருந்தனர். ஒரே கல்லால் இரண்டு குருவிகளையடிப்பது போல் திருவாங்கூர் அரசன் ஒரே வஞ்சனையால் இரண்டு காரியங்களைச் சாதித்துக் கொண்டான். வடுகர் சேனைத் தலைவருடன் கபடாலோசனை செய்து அவர்களைக் கொண்டு அம் மந்திரிகளைக் கொலைசெய்வித்தான்.

பிறகு ஒருநாள் வடுகர்சேனை பந்தோபஸ்தில்லாமல் உல்லாசமாய்க் கற்குளக்கோட்டைக்குள் திரிந்துகொண்டிருக்கையில் திருவாங்கூர் சேனை திடீரென்று அவர்களைத் தாக்கி, வடுகர் சேனை முழுவதையும் ஈவு இரக்கமின்றிக் கொலை செய்துவிட்டது. வடுகர் சேனையில் சிலர் தப்பியோடினர்கள். இக்கொடிய செய்தியைக் கேள்விப்பட்ட மங்கம்மாள் மிகுந்த கோபத்தோடு திருவாங்கூர் அரசனுக்குத் தக்க தண்டனை விதிக்கக் கருதி ஒரு பெருத்த சேனையைத் தளவாய் நரசப்பையரோடு 1698-ம் வருடம் அனுப்பினள். தளவாய் நரசப்பையர் திருவாங்கூர் சமஸ்தானத்தில் பிரவேசித்துக் கடும்போர் புரிந்து வெற்றிபெற்று மிகுந்த செல்வத்துடன் திருச்சிராப்பள்ளி வந்து சேர்ந்தார்.

1700-ம் வருடம் பூச்சே (Bouchet) என்ற பாதிரி, பிராமண மந்திரியான தளவாய் நரசப்பையரைப் பேட்டி கண்டு காணிக்கைகள் செலுத்தி, மரியாதைபெற்றுச் சென்றூர்.

தஞ்சை யுத்தம்

1700-ம் வருடத்தில் திடீரென்று யுத்தம் ஆரம்பித்தது. அதற்குக் காரணம் இன்னதென்று தெரியவில்லை. இராமநாதபுரத்திற்கும் தஞ்சைக்கும் ஏற்பட்ட எல்லை வழக்கால் இந்த யுத்தம் நேரிட்டதென்று எண்ண இடமிருக்கிறது. 1700-ம் வருடம் தளவாய் நரசப்பையர் தன் சேனைகளுடன் காவேரியின் தென்கரையில் தங்கி யிருந்தார். எதிரே வடகரையில் தஞ்சைச் சேனை காத்திருந்தது. தஞ்சைச் சேனையில் குதிரைப்படை அதிக மாயிருந்ததால் நரசப்பையர் அதை எதிர்க்கத் துணிய வில்லை. சமயம் பார்த்திருந்தார். ஒரு சமயத்தில் தஞ்சைச் சேனை பிரிந்து மதுரைச் சேனையை இருபுறமும் சூழ எண்ணிக் காவேரி நதியைத் தாண்டி வந்தது. தளவாய் நரசப்பையர் ரகசியமாய்க் காவேரியைத் தாண்டி நேருக்கு நேரே தஞ்சைச் சேனையைத் தாக்கினர். பிரிந்திருந்த தஞ்சைச் சேனை மறுபடி தங்கள் சேனையைக் காக்கவும் நகரத்தைக்காக்கவும் ஓடி வந்தது. தஞ்சைச் சேனை வரும்போது காவேரியில் திடீரென்று வெள்ளம் வந்து தஞ்சைச் சேனையில் அநேகரை அடித்துக்கொண்டு போயிற்று. நரசப்பையரும் எஞ்சிய சேனையைத் தாக்கி நாசஞ்செய்தார். பிறகு தஞ்சை மன்னன் சமாதானஞ் செய்துகொள்ள விரும்பினன். நரசப்பையர் தஞ்சை யரசனுடன் சமாதானஞ் செய்துகொண்டு வெற்றிக் கோலத்துடன் ஊர் வந்து சேர்ந்தார்.

1701-ம் வருடம் தஞ்சை மன்னனும் மதுரை மங்கம் மாளும் மைசூர் அரசனுக்கு விரோதமாய் யுத்த உடன் படிக்கை செய்துகொண்டார்கள். இதற்குக் காரணம், மைசூர் அரசன் காவேரி நதியின் குறுக்கே ஓர் பேரணை கட்டித் தஞ்சை திருச்சிராப்பள்ளி என்னும் நாடுகளுக்

குக் காவேரியிற் போதுமான ஜலம் வராதபடி தடுத்து விட்டதே. இதனுல் ஒரு பெரிய யுத்தம் நேரிடக்கூடியதா யிருந்தது. காவேரியில் திடீரென்று பெருத்த வெள்ளம் வந்து யுத்தகாரணமான அப்பேரணையை அடித்துக் கொண்டு போய்விட்டபடியால் யுத்தம் நேரவில்லை.

நரசப்பையர் மரணம்

1702-ம் வருடம் இராமநாதபுரம் கிழவன் சேதுபதியை யடக்கும்பொருட்டு, நரசப்பையரும் தஞ்சை மன்னனும் தக்க சேனைகளுடன் இராமநாதபுரத்தின் மீது படையெடுத்துச் சென்றுர்கள். மறவர்கள் ராஜாபிமானத்துடனும் தேசாபிமானத்துடனும் ஜாதிக் கட்டுடனும் ஏகோபித்துக் கடும் போர் புரிந்தார்கள். அப்போரில் நரசப்பையர் உயிரிழந்தரர். நரசப்பையர் மரணத்தால் மதுரை ராஜ்யத்திற்கே ஒரு பெருங் குறையேற்பட்டது. அதனுல் மதுரைச் சேனை தோல்வியடைந்தது.

அச்சையன்

நரசப்பையர் இறந்தபின் அச்சையன் என்பவர் தளவாய் ஸ்தானத்தை வகித்துவந்தார். இவ்வாறு இரண்டு மூன்று வருடங்கள் கழிந்தன. * 1704-ம் வருடம் **விஜயரங்கச் சொக்கநாதநாயக்கன்** பட்டத்திற்குரிய வயதினனுன். அவனிடம் ராஜ்யத்தை ஒப்புவித்துவிட்டு, மங்கம்மாள் மதுரையில் தன்னுடைய அரண்மனையில் தான தர்மங்கள் பல செய்துகொண்டு தன் காலத்தைக் கழித்து வந்தாள்.

---

* 1705-ம் வருடமென்றும் சிலர் அபிப்பிராயப் படுகின்றனர்.

12. விஜயரங்கச் சொக்கநாதன்

(1704—1731)

1704-ம் வருடம் விஜயரங்கச் சொக்கநாதன் ராஜ்யத்தைக் கைக்கொண்டான். அதே வருடத்தில் மங்கம்மாளும் காலஞ்சென்ருள். இவன் தெய்வ பக்தியும் மதவிஷயங்களிற் சிரத்தையுள்ளவனுயும் விளங்கினுன். புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்வதும் விசேஷ தான தர்மங்கள் செய்வதுமாய் இவன் காலங்கழிந்து வந்தது.

1709-ம் வருடம் அரசனுடைய ஆட்சித்திறமைக் குறைவால் மதுரை நகரிற்கலக முண்டாயிற்று. மந்திரிகள் அரசனுடன் ஒத்து ராஜ்யபாரத்தை ஏற்கவில்லே. இவன் காலத்தில் தளவாயாயிருந்த நாரணப்பையனேத் தொலேத்து கஸ்தூரி ரங்கநாயக்கன் தளவாய் ஆனுன். அவனேயும் தொலேத்து வெங்கடராகவாச்சாரியார் தளவாய் ஆனுர். இவ்வாறு கொஞ்ச காலத்திற்குள் தளவாய்கள் அநேகர் மாறினமையாலும், நிர்வாக அதிகாரிகளுள் ஒற்றுமை யில்லாமல் போனதினுலும் தேசம் சீர்குலேந்து விட்டது.

பன்னிரண்டு வருடப் பஞ்சம்

(1709—1720)

இக்காலத்தில் மறவர் நாட்டில் கொடிய பஞ்சம் நேர்ந்தது. ஜனங்கள் நாட்டை விட்டோடி மதுரை ராஜ்யத்திலும் தஞ்சை ராஜ்யத்திலும் குடியேறினுர்கள்.

1710-ம் வருடத்தில் இராமநாதபுரத்தை யரசாண்ட கிழவன் சேதுபதி மரணமடைந்தான். அவன் இறக்கும் போது அவனுக்கு வயது 80-க்கு மேலாகியிருந்தது. அவன் மனேவியரில் 47 பேர் அவனுடன் உடன்கட்டை யேறினதாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

கிழவன் சேதுபதி இறக்குமுன் தன் போகஸ்திரீ புத்திரனை **பவானிசங்கரத்தேவனைத்**தன் வாரிசாய் நியமித்தான். ஆனால் மறவர்கள் அதை யங்கீகரிக்காததால், அவர்களிஷ்டப்படி சுவீகாரபுத்திரனை **விஜயரகுநாதன்** என்றவன் சேதுபதியாய் ஏற்படுத்தப்பட்டான்.

1720-ம் வருடத்தில் நாட்டில் பஞ்சம் நிவர்த்தியாயிற்று. அதே வருடத்திற் கலகமுண்டாயிற்று. பவானி சங்கரத்தேவன் ஏவுதலாற் புதுக்கோட்டை அரசன் தஞ்சை மன்னனுடன் சேர்ந்துகொண்டு சேதுபதிமேற் படையெடுத்து வந்தான். விஜயரகுநாதன் அரந்தாங்கியில் அவர்களை எதிர்த்துப் போர்புரிகையில் சேனையில் கொள்ளைநோய் பரவிற்று. சேதுபதி, நகருக்குத் திரும்பி வந்து சிறிதுகாலத்திற்குள் சந்ததியில்லாமல் இறந்து போனான்.

மறுபடி இராமநாதபுர ஆட்சியைப்பற்றித் **தாண்டத் தேவனுக்கும், பவானிசங்கரத்தேவனுக்கும்** விவாதம் நேர்ந்தது. புதுக்கோட்டைத் தொண்டமானும் மதுரையரசனும் தாண்டத்தேவனுடன் சேர்ந்துகொண்டார்கள். பவானிசங்கரன் தஞ்சையரசன் உதவியைப்பெற்றான். இரண்டு சேனைகளும் செய்த போரில் பவானிசங்கரத் தேவன் கட்சி ஜெயம் பெற்றது. பவானிசங்கரன் மறுபடியும் சேதுபதியானான்.

சிவகங்கை ஜமீன்

1729-ம் வருடம் பவானிசங்கரத் தேவனும் **சசிவர்ணப்பெரிய உடையான்** என்ற ஒர் பாளையக்காரனுக்கும் விரோதமுண்டாயிற்று. சசிவர்ணன் தன் பாளையத்தினின்றும் துரத்தப்பட்டுத் தஞ்சையரசனிடம் அடைக்கலம் புகுந்து, அருகிருந்த முன்னைய சேதுபதியின் மாமனாகிய கட்டையத்தேவனுடன் சேர்ந்துகொண்டு

தஞ்சைச்சேனையின் உதவியைப்பெற்று இருவரும் பவானி சங்கரன் மேற் படையெடுத்து வந்தார்கள். உறையூரில் நடந்த போரில் பவானிசங்கரன் தோல்வியடைந்து கைதியாக்கப்பட்டான். இப்போருக்குப்பின், பாம்பாற்றுக்கு வடக்கேயுள்ள நாடுகளெல்லாம் தஞ்சையைச் சேர்ந்து விட்டது. மீதமுள்ள நாடுகளில் ஐந்தில் மூன்று பங்கு கட்டையத் தேவனுக்கும், ஐந்தில் இரண்டு பங்கு சசிவர்ணத்தேவனுக்கும் கிடைத்தன. இதுதான் சிவ கங்கை ஜமீன் எனப்படும்.

1713-ம் வருடத்திலும் 1717-ம் வருடத்திலும் ஏற் பட்ட இரண்டு தெலுங்குத் தாம்பிரசாசனங்களால், மதுரை ராஜ்யமானது அக்காலத்தில் சந்திரகிரி அரசாட்சிக் குட்பட்டதெனத் தெரியவருகின்றது. அச்சாசனங்கள் மதுரைத் தேவஸ்தானத்திலிருக்கின்றன.

1731-ம் வருடத்தில், விஜயரங்கச் சொக்கநாத நாயக் கன் சந்ததியின்றி மரணமடைந்தான். அவன் இறக்கவும் அவன் மனைவி மீனாட்சி என்பவள் பட்டத்திற்கு வந்தாள்.

18. மீனாட்சி
(1731—1736)

1731-ம் வருடத்தில் விஜயரங்கச் சொக்கநாத நாயக்கன் இறந்ததும் அவன் மனைவி மீனாட்சி வேறு சந்ததி யில்லாததினால் வாரிசுக் கிரமமாய்ப் பட்டத்திற்கு வந்தாள். தனது கணவன் கொடுத்துச்சென்ற அனுமதிப் படி, ராஜவம்சத்தைச் சேர்ந்த **வங்காருதிருமலையின்** மகனைச் சுவீகாரஞ் செய்து கொண்டாள். தனது சகோத ரன் **வெங்கடராயப் பெருமாள்** நாயக்கன் உதவியைக் கொண்டே அரசாட்சி செலுத்தி வந்தாள்.

கட்சி

மீனுட்சிக்கு விரோதமாய் ஒரு கட்சி யேற்பட்டது. அதற்குத்தலைவர் தளவாய் வெங்கடராகவாச்சாரியார் என்பவரே. மீனுட்சியைப் பட்டத்தினின்றும் நீக்கி வங்காரு திருமலையைப் பட்டத்தில் வைக்கவேண்டுமென்பது இக் கட்சிக்காரரது கொள்கை. ராணி திருச்சிராப்பள்ளிக் கோட்டையிலிருக்கையில் திருமலையின் கட்சிக்காரர், அவளறியு முன்னர்க் கோட்டைக்குள், பலாத்காரமாய்ப் புகுந்து விட்டார்கள். அதனுல் பலமான சண்டை நடந்தது. சண்டையில் திருமலையையும் அவன் கட்சிக் காரரையும் தோற்கடித்துத் துரத்திவிட்டார்கள்.

அக்காலத்தில் ஆற்காட்டு ராஜ்யத்தை, **நவாப் தோஸ்த் ஆலிகான்** அரசாண்டு கொண்டிருந்தான். அவன் தட்சிண தேச முழுவதையும் தன் ஆட்சிக் குட்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற பேராசை கொண்டான். உடனே தன் மூத்த குமாரனுன **சதர் ஆலிகானை**யும், தன் மாப்பிள்ளையும் மந்திரியுமான **சந்தாசாகிபை**யும் தக்க சேனையுடன் அனுப்பினுன். முஸ்லீம் வீரர் தஞ்சையைப் பிடித்துக் கொண்டார்கள். அவர்களால் திருச்சிராப்பள்ளியைப் பிடிக்க முடியவில்லை. ஆயினும் தெற்கே திருவாங்கூர் வரை சென்று ஊர்களையும் பட்டணங்களையும் நாசஞ்செய்துவிட்டுத் தக்க கொள்ளைப் பொருள்களுடன் திரும்பி வந்தார்கள்.

1734-ம் வருடம் வங்காருதிருமலை, சதர் ஆலிகானுடன் ஒரு இரகசிய ஒப்பந்தஞ் செய்துகொண்டான். அதாவது மீனுட்சியைப் பட்டத்தினின்றும் நீக்கிவிட்டுத் தனக்குப் பட்டங்கட்டினுல் அதற்குப் பிரதி யுபகாரமாய்த் தான் முஸ்லீம் தலைவனுக்கு முப்பது லட்சம் ரூபாய் கொடுப்பதாய் வங்காருதிருமலை ஒப்பந்தஞ் செய்து கொண்டான்.

சதர் ஆலிகான் ஓர் யுக்தி செய்தான். அதாவது வங்காரு திருமலேக்கும், மீனுட்சிக்கும் ஏற்பட்ட மதுரையரசாட்சியைப் பற்றிய விவாதத்தைத் தீர்த்துவைக்கவே தான் வந்திருப்பதாதவும், அது சம்பந்தமாக இருதரப்பிலும் சாட்சியம் சொல்லக்கூடியவர்கள் தன் முன் ஆஜராகும்படி, பறையடிக்கச் செய்தான். இதையொன்றும் கவனியாது மீனுட்சி அலட்சியமாய் இருந்துவிட்டாள். பேருக்கு ஒரு விசாரணே நடத்துவதாகப் பாவனே காட்டி விட்டு எதிர் பார்த்தவண்ணமே, வங்காருதிருமலேக்கு அனுகூலமாய்த் தீர்ப்புச்சொல்லி விட்டான். ஒப்பந்தப்படி வங்காரு திருமலேக்குப் பட்டங் கட்டிவிட்டு முப்பது லட்ச ரூபாயை வாங்கிவரும்படி சந்தாசாகிபை நிறுத்திவிட்டு, சதர் ஆலிகான் ஆற்காட்டுக்குப் போய்ச் சேர்ந்தான்.

காரியம் மிஞ்சிவிட்டதென்று பயந்து மீனுட்சி, சந்தாசாகிபுடன் ஒரு இரகசிய ஒப்பந்தஞ் செய்து கொண்டாள். மீனுட்சி, கோடிரூபாய் கொடுத்துவிடுகிறது என்றும், அதைப் பெற்றுக்கொண்டு சந்தாசாகிப் ஒன்றும் செய்யாமற் போய் விடுகிறது என்றும் ஒப்பந்தஞ்செய்யப்பட்டது. வஞ்சனே மிகுந்த சந்தாசாகிப் அதற்கிணங்கினுன். ஆயினும், மீனுட்சி அவன்மேல் சந்தேகங்கொண்டு அவனேக் கொரான்மேல் சத்தியம் செய்யச் சொன்னுள். அங்ஙனமே காவேரிக்கரையிலுள்ள தளவாய்மண்டபத்திற் சந்தாசாகிப் சத்தியம் செய்து கொடுத்தான். சத்தியம் தன்னேக் கட்டுப்படுத்தாமலிருக்கும் பொருட்டு, ஒரு செங்கல்லேப் பட்டுத்துணியால் சுற்றி அதன்மேல் சத்தியஞ் செய்து ஏமாற்றிவிட்டதாகவும் சொல்லுவதுண்டு.

சந்தாசாகிப் இவ்வாறு முஸ்லீம்களுடைய வேதப் புஸ்தகமாகிய கொரானே வைத்து சத்தியம் செய்துகொடுத்த பிறகு கோட்டைக்குள் விடப்பட்டான். கோட்டைக்குள் நுழைந்ததும் முதன் முதலில் அதிலுள்ள யானே குதிரை

களையும், மற்றுமுள்ள படைகளையும் தன் கைவசப்படுத்திக் கொண்டான். அத்துடன் நில்லாது கஜானுவையும் தன் வசப்படுத்திக்கொண்டு தன்னுடைய கெட்ட எண்ணத்தை வெளியிட்டான். சந்தாசாகிப் மீனாட்சியிடம் தான் ராஜ்யத்தைக் கோடிரூபாய் வாங்கிக்கொண்டு விற்க வரவில்லை யென்றும் ராஜ்யத்தையே கைப்பற்ற வந்தவ னென்றும் தன் கபட எண்ணத்தை வெளிப்படையாகச் சொன்னுன்.

வங்காரு திருமலையும் சந்தாசாகிப் மீனாட்சியிட மிருந்து ராஜ்யத்தைக் கபடமார்க்கமாய்க் கவர்ந்து தனக் குக் கொடுப்பானென்று எண்ணியிருந்தான். சந்தாசாகிப் மீனாட்சியை ஏமாற்றியதோடு வங்காரு திருமலையையும் ஏமாற்றினுன். இந்தச் சமாசாரத்தை யறிந்ததும் வங்காரு திருமலையும் அவன் மகனும் மதுரைக்கு ஓடிவிட்டார்கள்.

பெண்பிள்ளையான ராணி மீனாட்சிமட்டும் கோட்டைக் குள் அகப்பட்டுக்கொண்டாள். அச்சமயத்தில் அவளைக் காப்பாற்றுவார் ஒருவருமில்லை. சந்தாசாகிப் மீனாட்சி கோட்டையைவிட்டு வெளியே போய்விடாதபடி ஒரு சேனையை அரண்மனை வாயிலில் காவல் வைத்துவிட்டு, மிகுந்த சேனையுடன் மதுரை நோக்கிப் புறப்பட்டான்.

சந்தாசாகிப் செய்த அக்கிரமக் காரியங்களைக் கேள்விப்பட்ட மீனாட்சியின் கட்சியைச் சேர்ந்த இரண்டு சேனாதிபதிகளாகிய கோவிந்த ஐயரும், இராவணையரும் 8000 குதிரைப் படையுடன் எதிர்த்துச் சென்றுர்கள். முஸ்லீம்களுடைய சேனையும், இவர்களுடைய சேனையும் திண்டுக்கல்லுக்குப் பக்கத்தில் சந்தித்துக் கடும்போர் புரிந்தன. யுத்தத்தில் சந்தாசாகிப்பே வெற்றியடைந்தான். தோற்றவர்களில் சிலர் ஓடிவிட்டார்கள். சந்தாசாகிப் வெற்றியடைந்ததும் மதுரையை நோக்கிப் புறப்பட்டான். வங்காருதிருமலை இன்னெரு படையைக்கொண்டு சென்று

முஸ்லீம் சேனையை அம்மைய நாயக்கனூரில் சந்தித்து வீராவேசத்துடன் போர்புரிந்தான். எவ்வளவு முயன்றும் வாங்காருதிருமலையால் சந்தாசாகிப்பைத் துரத்த முடியாமற்போனதோடு தோற்றுப்போனான்: உடனே வங்காரு திருமலை நகரைவிட்டு ஓடிச் சிவகங்கை ஜமீனையடைந்து ஒளித்துக்கொண்டான். சிவகங்கைத் தலைவனும் வங்காரு திருமலையை தன்னாட்டைச் சேர்ந்த வெள்ளிக் குறிச்சியில் ஒளித்துவைத்தான். மதுரை ராஜ்ய முழுதும் முஸ்லீம்கள் வசப்பட்டுப் பாழடைந்தது.

ராஜ்யம் தன் வசப்பட்டதும், சந்தாசாகிப் தானே மதுரை ராஜ்யத்திற்குத் தலைவனென்றும் அதிகாரியென்றும் பலரும் அறியும்படி பறை சாற்றுவித்தான். மீனாட்சி உயிருடன் இருக்கும்வரை யாராவது அடிக்கடி கலகஞ்செய்து கொண்டேயிருப்பார்கள் என்று எண்ணி, அவளைக் கொலைசெய்துவிட உத்தேசித்தான். சந்தாசாகிபது எண்ணத்தையறிந்த மீனாட்சி அவன் கையால் இறப்பதைவிடத் தன் கையாலேயே இறப்பது மேலென்று எண்ணி விஷம் உண்டு இறந்தாள்.

வெள்ளிக்குறிச்சியில் ஒளிந்திருந்த வங்காருதிருமலை சதாரா மகாராஷ்டிரர்களைத் தஞ்சமடைந்து, அவர்களுடைய உதவியை வேண்டினான். ஹைதராபாத் நிஜாம் உல்முல்க் தோஸ்த் ஆரிகானுக்குத் தக்க சிட்சை விதிக்க வேண்டுமென்று முன்னமேயே மகாராஷ்டிரர்களை வேண்டிக்கொண்டிருந்தான். அதற்குத் தக்க சமயம் பார்த்திருந்த மகாராஷ்டிரர்கள், வங்காருதிருமலை தங்களைத் தஞ்சமடைந்த உடனே, கர்னாடகத்தின்மீது படையெடுக்கத் தக்கசமயமும் நேர்ந்தது என்று எண்ணினர். உடனே ராகோஜி பான்ஸிலே என்னும் மகாராஷ்டிரத் தலைவன் 60000 குதிரைப்படையையும் ஒன்றரை லட்சம் காலாட்

படையையும், கொண்டு 1739-ம் வருடம் கர்னுடக தேசத்தின்மீது படையெடுத்து வந்தான்.

ராகோஜி பான்ஸிலே படையெடுத்து வருவதை யறிந்த தோஸ்த் ஆலிகான், முக்கியமான சிலகணவாய்ப் பாதைகளில் முஸ்லீம்கள் சேனையைக் காவல் வைத்துவிட்டு எதிர்பாராத இடத்தில் ஒரு ஹிந்து சேனையை நிறுத்தி வைத்திருந்தான். இந்த ரகசியத்தை ஒற்றர் மூலமறிந்த மகாராஷ்டிரத் தலைவன், ஹிந்துப் படையிருந்த இடம் சென்று, அதன் தலைவனிடம் நட்புப்பாராட்டி, ஹிந்து வுடன் ஹிந்து எதிர்க்கக்கூடாது என்றும், ஹிந்துக்க ளெல்லோரும் ஒற்றுமையாயிருந்து முஸ்லீம்களைத் துரத்தி யடிக்க வேண்டுமென்றும் பலவாறு நியாயவாயிலாக எடுத்துக் காட்டினுன். ஹிந்து சேனைத் தலைவனும் அதற்கு இணங்கியதோடு ராகோஜி பான்ஸிலே தன் படையோடு செல்லவும் வழிவிட்டுவிட்டார்.

புதுச்சேரிக்குப் பக்கத்தில், முஸ்லீம் படையும், மகா ராஷ்டிரர் படையும் சந்தித்தன. கோரமான யுத்தம் நடந் தது. இருபக்கத்திலும் அநேகர் மாண்டனர். முஸ்லீம் சேனைத்தலைவனுன தோஸ்த் ஆலிகான் சண்டையில் மடிந் தான். தலைவன் இறக்கவே மாலுமியில்லாக் கப்பல்போல முஸ்லீம் சேனையானது சிதறத் தொடங்கி யோடத் தலைப் பட்டது. இரண்டு நாட்களுக்குப் பிறகு **சதர்ஆலிகான்** தன் சேனையுடன் அவ்விடம் வந்தான். தன் தகப்பன் தோற்றதோடு யுத்தத்தில் மடிந்தான் என்பதையறிந்த சதர்ஆலிகான் பயந்து **வேலூருக்கு** ஓடிவிட்டான். ராகோஜி பான்ஸிலே, சதர் ஆலிகானை வேலூர்வரை துரத் திச்சென்று, தங்களுக்கு அவன் ஒரு கோடி ரூபாய் கொடுக்க வேண்டுமென்றும், தஞ்சை, மதுரை ராஜ்யங் களை அதனதன் உரியவர்களிடம் விட்டுவிட வேண்டு மென்றும் உடன்படிக்கை செய்தான்.

இந்த உடன்படிக்கைக்குத் திருச்சிராப்பள்ளியைக் காத்துக்கொண்டிருந்த சந்தாசாகிப் அதற்கிணங்கவில்லை. உடனே ராகோஜி பான்சிலே சேனையுடன் திருச்சிராப் பள்ளியை முற்றுகையிட்டான். பாதாசாகிப் தன் சகோதரனை சந்தாசாகிப்புக்கு உதவி புரியவந்தான். ஆனால் யுத்தத்தில் மடிந்தான். 1741-ம் வருடம் மகா ராஷ்டிரர்கள் திருச்சிராப்பள்ளிக் கோட்டையைப் பிடித்துக் கொண்டு சந்தாசாகிப்பைச் சிறைப்படுத்தி சதாராவுக்கு அனுப்பிவிட்டார்கள். ராகோஜி பான்சிலே அவசரமாய் சதாராவுக்குப் போக நேர்ந்தது. வங்காருதிருமலையோ அர சாளத் திறமையற்று ஓடி ஒளிந்து விட்டான். ஆற்காட்டு நவாப்பைச் சேர்ந்தவர்களும் ஆளமுடியவில்லை. இந்த நிலைமையில் 1741-ம் வருடத்திற்குப் பிறகு மதுரை ராஜ்ய மானது சிதறி, பல வீரர்களாற் பங்கு போட்டுக்கொள்ளப் பட்டது. அக்காலத்தில் மதுரைத்தேசம் முழுதும் பஞ்சம், கொலை, கொள்ளை, நோய் முதலான பல துன்பங்களுக்கு இரையாயிற்று.

இத்துடன் நாயக்கர்களுடைய ராஜ்ய ஆதிக்கிய மானது மதுரை ராஜ்யத்தில் முடிவடைந்தது.

அனுபந்தம்

நாயக்க மன்னருக்குள், ஆட்சி முறையிலே ஒரு முறை நெறிப்பட்டு வந்ததாகத் துணிய இடமில்லை; துணியாதிருக்கவும் கூடவில்லை. நாயக்க மன்னருக்குள் மூத்த மகனே பட்டத்துக்கு உரியவன். புத்திரப் பேறில்லா அரசன் சுவீகாரம் செய்துகொண்டதும் உண்டெனத் தெரிகிறது. அன்றியும் இறந்துபட்ட மன்னனுடைய மனைவியாகிய விதந்து அரசாண்டதுமுண்டு. இவற்றால் அரசுரிமை ஒரு மன்னனுக்குப் பின் அவன் மகனுக்கோ அல்லது மகனில்லையாயின், மனைவிக்கோ அல்லது சுவீகார புத்திரனுக்கோ உண்டு என்பது அறியக் கிடக்கின்றது.

அரசன் இறக்க அவன் மகன் சிறுவனாயின், அரசகாரியங்களை, அரசி, அச்சிறுவன் பெயரால் நிர்வகித்ததுமுண்டெனத் தெரிகிறது. அரசனும் அரசியும் இல்லாத காலத்து அச்சிறுவனே அரசனாக, அவன் மந்திரி பிரதானியர் அரச காரியங்களை மேற்பார்த்து வந்தார்கள் என்பது சொக்கநாத நாயக்கன் வரலாற்றால் அறியக் கிடக்கின்றது.

ராஜ்யம் காரணமாகச் சிற்றரச குடும்பத்துள்ளார் இருவருக்குள் கலகம் நேரிடுமேயானால் பேரரசன்தான் தலையிட்டு அரசுக்குரியாரை நியமித்தலும் உண்டென்பது இராமநாதபுரக் கலகத்தால் அறிகிறோம். இன்னும் அவ்வரலாற்றாலே அரசனாயிருத்தற்குரிய ஆற்றலும் அறிவும் குடிகளுடைய நன்மதிப்புமில்லாத சிற்றரசனைப் பேரரசன் நீக்கித் தகுதியுடையவனும், அக்குடும்பத்திலுதித்தவனுமான ஒருவனை அரசனாக நியமிக்கலாம் என்பது தெளிவாகிறது.

பேரரசரான நாயக்க மன்னர், தம் கீழ் அநேகரைப் பாளையக்காரர் என்னும் பெயருடைய சிற்றரசராக்கி ஆண்டனர். அப்பாளையக்காரர் நாயக்க மன்னருக்கு அவசியம்

நேரிட்டபோது படையுதவிப் போர்த் துணையாகவேண்டும். அங்ஙனம் போர்த்துணையாகி உதவிய பாளையக்காரருக்கு நாயக்க மன்னர்கள் சிறப்புப் பட்டங்கள் வழங்கியதுண்டு. பட்டங்களோடு சில ஊர்களையும் சன்மானமாகத் தருவதும் வழக்கம். நாயக்க மன்னர்கள் தாங்கள் அயல் நாட்டரசை வென்றதுண்டாயின் அங்குத் தங்கள் உறவினன் ஒருவனைப் பிரதிநிதியாக நியமித்து அவன் மூலமாய் அதனையாண்டு வந்தது முண்டெனத் தெரிகிறது. அது கண்டிப் பிரதிநிதி யாகக் கிருஷ்ணப்ப நாயக்கன் தன் மைத்துனனுன விஜய கோபால நாயக்கனை அனுப்பியது கொண்டு அறியப்படும்.

நாயக்க மன்னர்கள் ஆட்சியிலே அரசன்தான் தலை வன். அவனிட்டதே சட்டம். அவனைக் கட்டுப்படுத்தச் சட்ட திட்ட மொன்றும் கிடையாது. தன்னுடைய இஷ்டம் போல மன்னன் பொருளாதிகளைச் செலவு செய்யலாம். அப்படிக் கிருந்ததனுலேதான் அவர்களால் அளவிலாத் திருப்பணிகளும் அழகிய கட்டிடங்களும் தான தருமங் களும் முடிக்க இடமுண்டாயிற்று. தங்கள் ஆதீனத்திலே எல்லா அதிகாரங்களும் இருந்தபோதிலும், அவர்கள் தங்கள் நாட்டிற்கு நன்மை பயக்கும் காரியங்களைச் செய்யத் தவறி விட்டார்களில்லை. அது பாராட்டத் தக்கதேயாகும்.

நாயக்க மன்னர்கள் தங்களுக்கு மந்திரியாகத் தக்கவர் களைத் தாமே தெரிந்தெடுத்துக்கொள்வர். அந்த மந்திரி களே சேனைத் தலைவர்களாய் அமைவதும் உண்டு. அரசன் தான் எவ்வளவு சுதந்திர புருஷனுனலும் தன் மந்திரியைக் கலந்தாலோசியாமல் எக்காரியமும் செய்வதில்லை. ஆலோ சனை சொல்லும் தோரணையில் மந்திரி ; ராணுவ தோரணை யில் அவன் தளவாய் என்னும் பெயரினன். இதனுலே நாயக்க மன்னர்கள், தங்கள் கீழ் அரச காரியங்களை நிர் வகிப்பார்க்குத் தனித்தனிப் பட்டப் பெயர்கள் கொடுத்து ஆண்டனர் என்பது தெரிய வருகிறது.

நாயக்க மன்னர்கள் தங்கள் மந்திரி பிரதானியராக அநேகமாய்ப் பிராமணர்களையே கொண்டார்கள் என்று இவ்வரலாற்ருல் அறிகிருேம். அந்த மந்திரிகளின் பெயர் களை நோக்குமிடத்து, அவை "சிந்தை துணிந்த தெலுங்க ருடைய" பெயர்களாகக் காணப்படுகின்றன. அதனுல் தெலுங்கராகிய நாயக்க மன்னர் தெலுங்கரை அநுசரித்து, அரச காரியங்களை நிர்வகித்தார்கள் என்பது புலனுகிறது.

நாயக்க மன்னர்கள் பல மனைவியரை மணந்து கொண் டார்கள் என்பதும், அவர்கள் காலத்தே உடன்கட்டை ஏறும் வழக்கம் உண்டென்பதும் தெரிய வருகின்றன.

அவர்கள் கல்வி விஷயத்தில் கவனக்குறைவுடைய ரெனச் சொல்லுமாறில்லை. திருமலை நாயக்கர் காலத்திலே தான் குமரகுருபர சுவாமிகள் சிறப்புற்று விளங்கியது. மீனுட்சியம்மை குறமே திருமலை நாயக்கர் தமிழபிமான முடையவர் எனக்காட்டும். குற்ருலக் குறவஞ்சி என்னும் நூலைப் பாராட்டி நிலம் சன்மானித்தவரும் நாயக்க மன்னரேயன்ருே? ஆரியநாயக முதலியாரின் தமிழருமை அறியாதார் யார்?

நாயக்க மன்னர்கள் வைணவரேயாயினும் மீனுட்சி சுந்தரேசுவரரையே குலதெய்வமாகக் கொண்டுவிட்டனர். எனினும் அவர்கள் பிறமதத்தவர்க்கு அம்மதத்தவர் நெறி கடவாத வரையில் யாதொரு தீங்கும் செய்திலர் என்பது தெரிகிறது.

நாயக்க மன்னர்கள் சிற்பத்தொழிலிலே மிகவும் மோக முடையர் என்றுதான் சொல்லவேண்டும். அவர்களுடைய மகத்தான வேலைப்பாடுகள் அமைந்த கட்டிடங்களே அவர் களுக்குச் சிற்பக் கலையிலிருந்த பிரியத்தை இனிது காட்டும்.

குடிகள் தங்கள் குறைகளை அரசனிடம் நேரே சென்று தெரிவிக்கலாம். அரசனே அப்பீல் கோர்ட்டு. அறங்கூற

வையத்தார் அவர்கள் காலத்திலே உண்டெனக்கிடையாது. பஞ்சாயத்துக் கோர்ட்டுகளே உண்டு.

நாயக்க மன்னர்கள் குடிகளுடைய வசதிகளை மிகவும் கவனித்திருக்கிருர்கள் என்பதை அவர்கள் புதுக்கிய குளங்களும், உண்டாக்கிய சாலைகளும், நிறுவிய வைத்தியசாலைகளும் போல்வன இனிது புலப்படுத்துகின்றன. விரிப்பிற் பெருகும்.

மதுரை நாயக்க அரசர்களின் கொடிவழி

நாகமநாயக்கன்—1559

|

விசுவநாதநாயக்கன்
1559—1563

|

குமாரகிருஷ்ணப்ப நாயக்கன்
1563—1573

|

கிருஷ்ணப்ப(பெரியவீரப்ப) நாயக்கன் 1573—1595	விசுவநாத நாயக்கன் II 1573—1595

|

லிங்கய (குமாரகிருஷ்ணப்ப) நாயக்கன் 1595—1602	விசுவப்பன் என்ற விசுவநாத நாயக்கன் III 1595—1602

|

முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கன்
1602—1609

|

முத்துவீரப்ப நாயக்கன்
1609—1623

|

திருமலை நாயக்கர்
1623—1659

|

முத்து அழகாத்திரி
1659—1662

|

சொக்கநாத நாயக்கன்
1662—1682

|

ரெங்ககிருஷ்ண முத்து வீரப்பன்
1682—1688
|
(ரெங்ககிருஷ்ண முத்துவீரப்பன் மகனுக்காக
அவனுடைய தாயாராகிய) மங்கம்மாள்
1689—1704
|
(ரெங்ககிருஷ்ண முத்துவீரப்ப நாயக்கன் மகன்)
விஜயரங்க சொக்கநாத நாயக்கன்
1704—1731
|
(விஜயரங்க சொக்கநாத நாயக்கன் மனைவி)
மீனாட்சி
1731—1736

இத்துடன் நாயக்கவமிசம் முடிவடைந்தது.